திருநெல்லை

ஆன்மீகத் திங்களிதழ்

குரோதி - சித்திரை - 2024 - மே | இணைய வழி - மலர் - 1 - இதழ் - 9

காசி அன்னபூரணி

திருநெல்லை

இணைய வழி ஆன்மீகத் திங்களிதழ்

குரோதி – சித்திரை

2024–மே

இணையவழி மலர் 1 – இதழ் 9

(தனிச் சுற்றுக்கு மட்டும்)

சிறப்பாசிரியர்

பொற்கிழிக் கவிஞர்

சொ.சொ.மீ. சுந்தரம்

ஆலோசகர்

தமிழாகரர் தெ. முருகசாமி

ஆசிரியர் குழு

வெளியிடுபவர்

சீர் வளர் சீர்

நாராயண ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் மடாலயம்

கோவிலூர் 630 307

மானகிரி (அஞ்சல்)

(வழி) காரைக்குடி

சிவகங்கை மாவட்டம்

04565–236846

94433 37011

இணைய அச்சாக்கம்

திரு. கணேஷ்

ஸ்ரீபெரும்புதூர்

பொருளடக்கம்

பக்கம்

1. ஆசிரியுரை... 3
2. கோவிலூர் ஆண்டவர் திவ்ய வரலாறு 8
3. நல்லன எல்லாம் தரும் சுந்தர காண்டம்.............................. 13
4. சமய எழுச்சியால் சமூக மறுமலர்ச்சி காட்டிய அப்பர்........... 17
5. மெய்ஞானத் திருப்புகழில் விஞ்ஞானக் கூற்றுகள்....... 26
6. கோவிலூர் புதையல்கள் 35
7. காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி பாடல் நலம்............... 40
8. தர்மரை தர்மசங்கடத்தில் ஆழ்த்திய புருஷா மிருகம்.... 45
9. சிவாலயங்களின் சிறப்புகள்............. 48
10. பெரியபுராண கதை களம்........... 53
11. தென்சபாநாயகர் கோவில் தரிசனம்.... 54
12. ஒலிப்பேழை... 55
13. பயிற்சிப்பேழை... 56
14. கோவிலூர் ஆண்டவர் நூலகம்....... 57
15. முந்தைய இதழ்கள்...... 59

ஆசியுரை

சீர் வளர் சீர்

நாராயண ஞான தேசிக சுவாமிகள்

கோவிலூர் ஆதினகர்த்தர்

காசி அருள்மிகு விசுவநாதர் திருக்கோயிலில்

அன்னதானம்

நல்ல எண்ணங்களை இறைவன் விரைவில் நிறைவேற்றித் தருகிறான். திருநெல்லையின் மாசி மாத இதழில் காசியில் அன்னதானம் செய்வதற்கான பணிகள் தொடங்குவது குறித்து தெரிவித்து இருந்தோம். காசி விசுவநாதர் திருக்கோயிலை நிர்வகித்து வரும் அறநிலையில் கோவிலூர் மடம் சார்பில் அன்னதானம் நடத்துவது குறித்து நாம் அளித்த விண்ணப்பம் பரிசீலனையில் இருந்து வந்தது. கோவிலூர் மடாலயம் ஏற்படுத்தியுள்ள காசி விஸ்வநாதர் கோவிலூர் பவுண்டேஷன் என்ற அறநிலையின் சார்பில் சுமார் ஐயாயிரம் (5000) பேருக்கு உணவு தயாரித்து வழங்கும் அன்னதான சேவையைச் செய்ய அனுமதிக் கடிதம் தற்போது திருக்கோயில் நிர்வாகத்தாரால் வழங்கப்பெற்றுள்ளது.

அதற்கான அனுமதிக் கடிதத்தைக் காசி விஸ்வநாதர் கோவில் தலைமை நிர்க்கவாக அதிகாரி திரு விஷ்வா பூஷன் மிஸ்ரா லக்னாவில் நேரில் நம்மிடம் வழங்கினார். அப்போது அவரிடம் காசி கோயிலும் கோவிலூர் மடமும் இணைந்து செயலாற்ற வாய்ப்புள்ள விஷயங்கள் குறித்து

காசியில் நாள் ஒன்றுக்கு சுமார் 5000 நபர்களுக்கு உணவு அளிக்கும் திட்டத்தை நம் நிர்வாகத்தில் ஏற்படுத்த அனுமதிக்கும் கடிதத்தை காசி விசுவநாதர் கோவில் தலைமை செயல் அதிகாரி, திரு விஸ்வ பூஷன் மிஸ்ரா அவர்களிடம் பெற்ற நிகழ்வு.

விவாதிக்கபப்பட்டன.

இந்த அனுமதிக் கடிதத்தை காசி விசுவநாதர் திருப்பாதத்தில் வைத்து வழிபட விரும்பினோம். இதற்கு எந்தத் தயக்கமும் இன்றி மாவட்ட துணை மாஜிஸ்திரேட் திரு சாம்பு சரண் உடனே ஏற்பாடு செய்தார்கள். நாமே நேரில் காசி கோயிலுக்குச் சென்று, அந்தக் கடிதத்தை விசுவநாதர் திருப்பாதத்தில் வைத்து அவரைத்தொட்டு வழிபட்டோம் எதிர்பாராத விதமாக விசுவநாதர் அணிந்திருந்த மாலையை ஒருவர் அப்போது நமக்கு அணிவித்தார். இது காசி விசுவநாதரின் ஆசி முழுமையாக இருப்பதை உணர்த்தியது.

நம் கோவிலூர் மடத்தை நிறுவியவர்களின் நல்லூழ், நகரத்தார்கள் அறச்சிந்தனை, கோவில் நிர்வாகிகளின் நல்லெண்ணம் மற்றும் நமது தொடர்ந்த விடா முயற்சி ஆகிய அனைத்தும் இந்த பெரும் பேற்றைப் பெற்றுத் தந்திருக்கிறது.

துவக்கத்தில், நம் நாட்டுக்கோட்டை சத்திர மேலாண்மை கழகம் நிர்வகித்து வரும் உணவு தயாரிப்பு கூடத்தில் இந்த அன்னதானத் திட்டம் செயல்படுத்தப் படலாம் என்ற எண்ணம் எழுந்தது. ஆனால் பெரிய அளவில் உணவு கொள்கலன்களைக் கொண்டு செல்ல அந்த இடம் போதுமானதாக இருக்காது என்பதும் உணரப்பெற்றது. வண்டிகள் வந்து போக இடைஞ்சலாக இருக்கும், வேறு இடம் அமைந்தால் நலம் என்று கோவில் நிர்வாகம் எண்ணியது.

பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் திறந்து வைத்த, ஐந்து மாடிக் கட்டிடத்தில் நாம் சமையல் கூடம் அமைத்துக் கொள்ள இப்போது முடிவெடுக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில், தேவையான பகுதியை உணவு தயாரிப்புக்கு ஒதுக்கிவிட்டு பிற பகுதியை இதர பயன்பாட்டுக்கு கொண்டு வர முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே காசி நாட்டுக்கோட்டை சத்திர மேலாண்மை கழகம் நிர்வகித்து வரும் நாள் ஒன்றுக்கு 500–600 பேருக்கான அன்னதானம் அந்நிர்வகாத்தின் கீழ் தொடர்ந்து நடைபெறும். காசி விசுவநாதர் கோவிலூர் பவுண்டேசன் நிர்வாகத்தில் 5000 பேருக்கான அன்னதான அறமும் நடைபெறும்.

இவ்விரண்டு அறங்களும் நகரத்தார்களுக்கும் அவர்களின் அறச் சிந்தனைக்கும் காசி விசுவநாதர் அளித்த வரமாக நாம் எண்ணுகிறோம்.

இந்த அறச் சிந்தனை வளர நம் ஆசிகள்.

நாள் ஒன்றுக்கு சுமார் 5000 நபர்களுக்கு உணவளிக்கும் திட்டத்திற்கு, உணவுக்கூடம் அமைக்க கோவிலில் இருந்து நமக்கு அளிக்கும் கட்டடம்.

காசியில் உள்ள "அசி காட்" கோவிலூர் மடத்தில் அன்னதானம்

காசியில் அசி காட் என்ற இடத்தில் உள்ள நம் மடத்தில் உணவு கூடம் விரிவு படுத்தப்பெற்று வருகிறது. நாள் ஒன்றுக்கு ஆயிரம் பேர் இங்கு அன்னதானம் பெற இருக்கிறார்கள். அதற்கு வேண்டிய உபகரணங்கள் ஜூன் மாதம் முதல் வாரத்தில் காசிக்கு வந்து சேரும் என்று எதிர்பார்க்கிறோம் ஆகவே ஜூன் 15க்குள் அந்த விரிவாக்கப்பட்ட உணவு தயாரிப்பு கூடமும் இயக்கத்திற்கு வந்து விடும்.

இவற்றில் பங்கு கொள்ள அன்பர்கள் பலரும் நம்மை அணுகி உள்ளார்கள். அன்னதானம் துவங்கியபின் அனைத்து அன்பர்களும் இவ்வறத்தில் பங்கு கொள்ளும் வாய்ப்பு அளிக்கப்பெறும்.

இணையவழி நூலக விரிவாக்கமும் ஆவணக் காப்புப் பணிகளும்

நம் கோவிலூர் மடாலயத்தின் சார்பில் இணைய நூலகம் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. நாள் ஒன்றுக்கு 3000 பக்கங்கள் வரை இப்போது பதிவேற்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதன்வழியாக பல அரிய புத்தகங்கள் மின் வடிவில் கிடைக்கின்றன. மதுரை நகரத்தார் சங்க நூலகத்தில் உள்ள நூல்களையும் நம் இணைய நூலகத்தில் விரைவில் பதிவேற்றம் செய்ய உள்ளோம்.

இப்பணி ஒருபுறம் நடக்க ஆவணங்களை மின்வடிவில் காப்பாற்றும் பணிகளையும் நம் மடாலயம் செய்துவருகிறது. அண்மையில் புதுவயலில் நூற்று நான்கு ஆண்டுகளாக இயங்கிவரும், ஸ்ரீ சரசுவதி சங்கத்தார் அவர்கள் கூட்டக் குறிப்புகளையும், ஆண்டு அறிக்கைகளையும் விருந்தினர் குறிப்புப் புத்தகங்களையும் பாதுகாக்க இயலாமல் உள்ளது என்று தெரிவித்தார்கள் அவற்றை ஒரே நாளில் மின்பதிப்பாகச் செய்து அவ்வாவணங்களைப் பாதுகாப்பாக்கி, அவர்களிடம் அளித்தோம்.

இதே போல, பாதுகாக்கப்பட வேண்டிய ஆவணங்கள் எந்த நூலகத்திலாவது/ நகரத்தார் அமைப்பிலாவது இருந்தால் அவற்றை நாம் கட்டணம் ஏதும் இன்றி மின் வடிவில் (Digital) செய்து தரத் தயாராக இருக்கிறோம். இப்பணியை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

பாரம்பரியக் கலைகள் பயிற்சி

நம் மடத்தில் நாச்சியப்ப சுவாமிகள் துவக்கிய நாதஸ்வரம், தவில் இசைக்கப் பயிற்சிக் கல்லூரி, மற்றும், திருமுறை ஒத பயிற்றுவிக்கும் கல்லூரி ஆகியன தொடர்ந்து இயங்கி வருகின்றன. சில காலம் மாணவர்கள் சேர்வது குறைந்தது. கடந்த சில மாதங்களில் அதிக முயற்சி செய்து மாணாக்கர் சேர்க்கை இப்போது பெருகி வருகிறது.விரைவில் பெருமளவில் மாணாக்கர்கள் சேர்வார்கள் என

நம்புகிறோம். அவர்களுக்கு உணவு, உறைவிடம் மற்றும் உதவித்தொகை மதம் ஒன்றுக்கு 500 ரூபாய் அளித்து வருகிறோம். இதில் சேரும் மாணாக்கர்கள் முறை சார்ந்த கல்வி வேண்டும் என விரும்பினால், நம் பள்ளியில் அவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கிறோம். நம் பள்ளியில் இலவசக் கல்வி பெரும் மாணாக்கர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுவது இல்லை. சாதி, மத வேறுபாடு இல்லாமல் எவர் வேண்டுமானாலும் இந்தக் கலைகளில் பயிற்சி பெறலாம்.

இது குறித்து சன் தொலைக்காட்சியில் (Sun TV) வெளியான காணொளியை இங்கு காணலாம்.

தமிழில் பூசை செய்யும் பயிற்சி

தமிழகத்தில் சுமார் முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட கோயில்களில் ஒரு காலப் பூசை கூட இல்லாமல் இருக்கும் நிலை நமக்கு வேதனை அளிக்கிறது. அவற்றில் ஆகமம் பயின்ற அர்ச்சகர்களை நியமிக்கும் திட்டத்தை சில மாதங்களுக்கு முன் தெரிவித்து இருந்தோம். அதில் இன்னும் நாம் கடக்க வேண்டிய தடைகள் பல இருக்கின்றன. அந்தத் தடைகளைக் கடக்கும் முயற்சியில் இப்போது ஈடுபட்டிருக்கிறோம்.

எப்படி இருப்பினும் இவ்வளவு கோயிலைகளுக்கும் அர்ச்சகர்கள் கிடைப்பார்களா என்ற கேள்வியும் எழுகிறது. இது குறித்து பேரூர் அடிகளிடமும் சிரவை ஆதினகர்த்தரிடமும் கலந்து பேசினோம். அப்போது சிரவை ஆதீனத்தில் மே மாதம் 21ம் தேதி முதல் ஜூன் மாதம் 11ம் தேதி வரை தமிழ் வழி பூசை செய்யும் பயிற்சி நடைபெறும் என்ற மகிழ்வான செய்தியை சிரவை ஆதீனகர்த்தார் நமக்குத் தெரிவித்தார்கள். அதில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் அங்கேயே தங்கி பயிற்சி பெற வேண்டும். உணவு, உறைவிடம் மற்றும் பயிற்சிக்கு கட்டணம் ஏதும் இல்லை.

இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் திரு உமாபதி அவர்களை 9942411498 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

கோவிலூர் மடாலயப் பணிகள் இந்திய நாடு தழுவி செயல்பட்டு வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. மக்களின் வயிற்றுப் பசி போக்கவும், அறிவுப் பசி போக்கவும், தெய்வீகக் கலை வளர்ச்சிகளை ஊக்குவிக்கவும் இறைவன் நற்கருணை துணை செய்கிறது. எல்லாம் வல்லவன் வழிநடத்தும் நல்ல செயல்கள். இவை நாளும் பெருகட்டும்.

கோவிலூரின் கதை - 5

சீர் வளர் சீர் வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் என்னும் திருக்களர் ஆண்டவர் வரலாறு

திருக்களரில் உள்ள சீர் வளர் சீர் வீரசேகர சுவாமிகளின் திருவுருவச்சிலை



சீர் வளர் சீர் வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் என்னும் திருக்களர் ஆண்டவர் வரலாறு (ஐந்தாவது பட்டம்) (1883–1911)

- முனைவர் மு.பழனியப்பன்
தமிழ்த்துறைத் தலைவர்,
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
திருவாடானை

கோவிலூரின் ஐந்தாம் பட்டமாகத் தன் விருப்பத்தின்பேரில் இல்லாமல் பலரது வேண்டுகோளுக்கு இணங்க பட்டமேற்றவர் புதுவயல் வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் ஆவார். இவர் திருவாரூருக்கு அருகில் உள்ள திருக்களர் என்றும் ஊரில் உள்ள சிவாலயத்தின் மீது மிகு பற்றுக் கொண்டு அவ்வாலயத்திற்குத் திருப்பணி செய்து,

அங்கு தன் நிறைவாழ்வைக் கண்டவர் என்பதால் திருக்களர் ஆண்டவர் என்றும் அழைக்கப்படுகிறார்.

சீர் வளர் சீர் முத்திராமலிங்க ஆண்டவர் அருள்மிகு கோவிலூர் திருநெல்லை உடனாய கொற்றவாளீசர் ஆலயத்திற்கான விரிவான வரைபடத்தைத் தயாரித்த போது அவரின் அருகிருந்த நல்லான் செட்டியார் இவ்வளவு விரிவானதொரு கோயிலைக் கட்ட இயலுமோ என்று கேட்டார். அதற்கு ஆண்டவர் சுவாமிகள் ‘‘கவலை வேண்டாம். கண்டோர் வியக்கும் வண்ணம் இதனைக் கட்டி முடிக்க ஒரு வீரன் வருவான் ” என்று உரைத்தார். அத்தகைய நல்வாசகத்தின்படி சத்திய ரூபமாக வீரனாக வந்தவர் சீர் வளர் சீர் வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் ஆவார்.

புதுவயலில் வாழ்ந்த அருணாசலம் செட்டியார், உமையாள் ஆச்சி ஆகியோரின் பிள்ளைக் கலி தீர்க்கப் பிறந்த மகன் வீரசேகரர் ஆவார். இவர் 1848 ஆம் ஆண்டு, ஆவணி மாதம் பன்னிரண்டாம் நாள் வெள்ளிக்கிழமை அன்று மண்ணுலகு மேன்மை பெற உதித்தார்.

இவருக்கு இளம் வயது முதலே புதுவயல் அழகப்பா ஐயா என்பவர், பட்டினத்தார், தத்துவராய சுவாமிகள் ஆகியோர் நூல்களையும் கொடுத்து இவருக்கு வேதாந்த அறிவினைப் புகட்டினார். இவர் தம் பத்தாம் வயதில் வெளிநாடு சென்று திரவியம் தேடச் சென்றார். அப்பயணம் முடித்து வந்தபின் இவ்வுலக வாழ்வில் நாட்டம் இல்லாது அருள் உலக வாழ்வில் நாட்டம் பெற்றவராக விளங்கினார்.

இவரின் ஞானவாழ்விற்கு வீரப்ப ஐயா என்பவர் வழிகாட்டினார். கோவிலூர் வேதாந்த மடம் சென்று அங்குக் கருணாநிதி சுவாமிகளிடம் சீடராகச் சென்றிட அவர் நல்வழி காட்டினார். கோவிலூர் வந்து சேர்ந்த வீரசேகரர் அங்கிருந்த பொன்னம்பல சுவாமிகள் வழியாக கோவிலூர் மடாலயத்தின் மூன்றாம் பட்டமாக விளங்கிய சீர் வளர் சீர் கருணாநிதி சுவாமிகளின் சீடராக ஏற்கப்பட்டார். இந்நிலையில் இவரின் குடும்பத்தார் இவருக்குத் திருமணம் நடத்திட எண்ணினர். இதனை அறிந்த வீரசேகரர் ஒருவரும் அறியாது பொருள்வைத்த சேரிக்குச் சென்று அங்கு அப்போது உத்தலிங்க சுவாமி மடத்தில் இருந்த சட்டையப்ப சுவாமிகளிடத்தில் சந்நியாச தீட்சை பெற்றுத் துறவாடை ஏற்றுத் துறவியானார். மீண்டும் கோவிலூர் வந்து கோவிலூர் மடாலயத்தின் மரபின்படி நாநா சீவ வாதக் கட்டளை என்ற நூல் தொடங்கி ஞான வாசிட்டம் வரை உள்ள வேதாந்த நூல்கள் அத்தனையையும் தன் குருவிடம் பாடம் கேட்டார்.

இதனைத் தொடர்ந்து தலயாத்திரையை நடை பயணமாக மேற்கொள்ள வீரசேகர சுவாமிகள் விருப்பம் கொண்டார். சிதம்பரத்திற்கு நடந்தே சென்றார். வழிநடையில் கிடைத்த பொருளைப் புசித்து நடந்தார். பின்பு மௌன

சுவாமிகள் மடத்தில் இருந்தபடி பன்னிரு ஆண்டுகள் நடராச மூர்த்தியைத் துதித்து வந்தார். இந்நேரத்தில் மூன்றாம் பட்டமான கருணாநிதி சுவாமிகள் விவேக முக்தி அடைய, பொன்னம்பல சுவாமிகள் அவரின் பாதுகைகளைப் பெற்றுச் சிதம்பரத்தில் தங்கி மடம் நிறுவினார். அப்போது வீரசேகர சுவாமிகள் சிதம்பரத்தில் இருப்பதை அறிந்து அவரை அழைத்து வந்து இரவு நேரத்தில் இம்மடத்தில் நடைபெறும் வேதாந்த சத் சங்கத்தில் கலந்து கொண்டுப் பிச்சை ஏற்று அருள வேண்டினார். இவ்வாறு பொன்னம்பல சுவாமிகளும் வீரசேகர சுவாமிகளும் இணைந்து சிதம்பரத்தில் அருளாட்சி புரிந்து வந்தனர்.

இந்நிலையில் கோவிலூர் மடாலயத்தின் நான்காம் பட்டமாகிய சீர் வளர் சீர் இராமநாத சுவாமிகள் இறைநிலை அடைந்த நிலையில் கோவிலூர் மடத்திற்கான அடுத்தப் பட்டத்திற்கு உரியவராக யாரை ஏற்பது என்ற கேள்வி எழுந்தது. பொன்னம்பல சுவாமிகள் தில்லையில் நடந்த வேதாந்த சத் சங்கத்தில் வீரசேகரே தக்கவர் என்று அசரீரி போல் ஒலித்தார். இதைக் கேட்டுத் திகைத்த வீரசேகர சுவாமிகள் அன்று இரவே ஒருவரும் அறியாது மடத்திற்குத் தலைமை ஏற்றல் தனக்கு ஏற்புடையதன்று என்று கருதி வேறு ஓர் ஊரில் சென்று மறைந்து கொண்டார்.

அவர் மறைந்திருந்த வளவனூர் மடத்திற்குப் பலரை அனுப்பி வீரசேகர சுவாமிகளை வரவழைத்துக் கோவிலூர் மடத்தின் தலைமை ஏற்ற சம்மதிக்கச் செய்தார். தம்மை எல்லாம் கடைத்தேற்றிட குருமார்கள் உதவினார்கள். அவர்களைப் போல உலக உயிர்களை உய்விக்க இப்பணி ஏற்றருள்க என்று பொன்னம்பல சுவாமிகள் இவரை ஆற்றுப்படுத்தினார். மேலும் நான்காம் பட்டத்தின் விருப்பமும் அதுவே ஆன காரணத்தினால் இத்தலைமை சீர் வளர் சீர் வீரசேகர சுவாமிகளுக்கு அமைந்தது. அவருடன் கோவிலூரில் உடன் இருந்து பொன்னம்பல சுவாமிகள் பல நற்காரியங்கள் செய்துவித்தார். சில நாட்களில் தில்லை மடம் சென்றார்.

சீர் வளர் சீர் வீரசேகர ஞான தேசிக சுவாமிகள் கோவில், மடம் எல்லாவற்றையும் கலைநயம் பொலிய சிறப்புடன் ஆக்குவித்தார். கைலாசக் கொட்டகை, பிரம்ம சபை, கொற்றவாளீசர் ஆலயம், திருநெல்லை அம்மன் சந்நிதி கரும் சலவைக்கல் பணி, பூ மண்டபம், குருபூசைக் கட்டு, ஊருணி கல் படித்துறை, நெற்களஞ்சியம், அடியார் தங்குமிடம் போன்றன கலை எழில் மிகுந்து உருவாகின. கோவிலூர் கலைநயமிக்கக் கலைநகரானது இவரது காலத்தில்தான்.

சிருங்கேரி மடத்து சங்கராச்சாரிய சுவாமிகள் இராமேசுவர யாத்திரையாக வந்த போது, அவரைக் கோவிலூர் அழைத்து வந்து வீரசேகர சுவாமிகள் பெருமை கொண்டார். இவரின் கலை நயமிக்க எழில் கட்டுமானம் கண்டு சிருங்கேரியில் உள்ள அருள்மிகு சாரதா தேவிக்குக் கருங்கல் கோவில்

அமைக்க வேண்டினார். இதனை ஏற்று பொருள் செலவு செய்து அருமைப் பணியாக சாரதா கோயில் பணியையும் செய்துமுடித்தார் வீரசேகர சுவாமிகள். தொடர்ந்து நடைபெற்ற கொற்றவாளீசர் திருக்கோயில் குடமுழுக்கில் சாரதா பீட சங்கராச்சாரியார் கலந்து கொண்டு வீரசேகர சுவாமிகளுக்குப் பஞ் சரத்தினம் வழங்கிச் சிறப்பித்தார்.

இவரின் சீடர்களாக பலர் விளங்கினர். வேங்கட்ட முனிவர், வெள்ளியங்கிரி, சுப்பையா, அண்ணாமலை, நாராயணன், காசிகாநந்தர், மகாதேவர், சிவாநந்தர் போன்றோர் அச்சீடர்களுள் குறிக்கத்தக்கவர்கள். இவ்வாறு நடந்து வரும் நிலையில் திருவேரகத் தலத்தில் (சுவாமி மலை) நடைபெற்ற குடமுழுக்கு விழாவில் வீரசேகர சுவாமிகள் கலந்து கொண்டார். அப்போது அன்பர் ஒருவர் திருக்களர் என்ற தலம் திருப்பணி செய்ய வேண்டிய நிலையில் இருப்பதை சுவாமிகளுக்குத் தெரிவித்தார்.

சுவாமிகளும் இதனைக் கருத்தில் கொண்டார். வீரசேகர சுவாமிகள் முன்கோப குணம் உடையவர். அவரின் கோபம் குறைய வேண்டியும் திருக்களர் செல்ல அவர் விரும்பினார். துருவாச முனிவருக்கு ஆடல் காட்டி அவரின் கோபத்தைக் குறைத்த தலம் அத்தலம். எனவே அத்தலம் வீரசேரக சுவாமிகளின் ஏற்பு தலமாக விளங்கியது. திருக்களர் சென்று அங்கு அக்கோயில் திருப்பணிகளைச் செம்மையுடன் செய்து வந்தார். பெரும்பாலும் இக்காலத்தில் சுவாமிகள் திருக்களரில் தங்கியபடி கோவிலூர் பணிகளையும் செய்து வந்தார்.

திருக்களர் குடமுழுக்கு விழாவினைச் சிறப்புடன் முடித்தார் வீரசேகர சுவாமிகள். மேலும் திருவிழாவிற்குத் தேவையான வெள்ளி வாகனங்கள், வெள்ளிக் கவசங்கள், அலங்காரப் பொருள்கள், தீப தூப பொருள்கள், குடை முதலான பொருட்கள் எல்லாவற்றையும் அக்கோயிலுக்கும் மக்களின் பேராதரவுடன் வீரசேகர சுவாமிகள் அமைத்துத் தந்தார். திருவிழாக்களும், நாள் வழிபாடுகளும் சிறப்புற அக்கோயிலுக்கு அமைந்தது.

கோவிலூரில் ஆடிப்பூர உற்சவம் இக்காலத்தில் வந்தது. அதனையும் நியம முறைப்படி வீரசேகர சுவாமிகள் நடத்தினார். இதனிடையில் திருக்களர் மண்டலாபிஷேக நிறைவு விழா வந்தது. திருக்களர் பிரம்மோத்சவமும் வந்தது. ஆனால் மற்றவர்கள் இவற்றை அடுத்த ஆண்டு நடத்தலாம் என்று எண்ணியபோது வீரசேகரர் அவ்வாண்டே நடத்தவேண்டும் என்று கொடியேற்றித் துவக்கி வைத்தார்.

திருக்களர் பாரிஜாதவனேஸ்வரர், அமிர்தவல்லிக்கு அருள்பெருந்திருவிழா சிறப்புடன் நடக்கத் தொடங்கியது. தேர்த்திருவிழாவும் நடைபெற்றது. வீரசேகர சுவாமிகள் தேர்த்திருவிழாவின்போது நடத்தப்படும் உயிர்ப்பலியை நடத்தக் கூடாது என்று தவிர்த்தார். பஞ்ச மூர்த்திகளின் தேர்கள்

அசைந்தாடிக் கொண்டு வந்தன. சுவாமியின் தேர் தென்கிழக்கில் நகராமல் நின்றுவிட்டது. இது சற்று கவலையை அனைவருக்கும் அளித்தது. வீரசேகர சுவாமிகள் தன் இருப்பிடத்திற்கு வந்து மற்ற பணிகளைக் கவனித்தார்.

அடுத்த நாளுக்கான வேலைப் பணிகள் சுவாமிகளால் அருளப்பெற்றன. அப்போது சுவாமிகள் ‘‘நாளை கற்பூரமும், பூக்களும் அதிக அளவில் தேவைப்படும் . வாங்கி வாருங்கள்’’ என்றார். இது ஓர் அருள் குறிப்பு. மேலும் அனைவரிடத்திலும் எடுத்த பணியை விடாது செய்ய வேண்டும் என்று கூறினார்.

காலை எழுந்து அன்பர்களிடத்தில் இன்று மதியப் பொழுதிற்குள் தேர்கள் அனைத்தும் சேர்க்கை சேரவேண்டும். அதற்கேற்ப ஆட்களைச் சேருங்கள் என்று ஆணையிட்டார். வீரசேகர சுவாமிகள் மிக்க மகிழ்வுடன் தேரின் பக்கத்தில் சென்று அதனை உருட்டிட ஆவன செய்தார். அருகிருந்து ‘‘அர கர மகாதேவா’’ என்று பலமுறை முழங்கினார். என் உயிர் கொண்டு தேர் நகரட்டும் என்று அவர் மனம் இறைஞ் சியது.

அரகர மகா தேவா முழக்கத்துடன் அவர் பூமியில் சாய்ந்தார். அருகிருந்த அந்தணர் அவரைத் தாங்கிப் பிடிக்கிறார். சீர் வளர் சீர் வீரசேகர ஞான தேசிக சுவாமி முக்தி பெற்றார். அவரை உரிய முறையில் அவர் நிர்மானித்த திருக்களர் சீவசமாதிக்குகையில் வைக்க ஏற்பாடுகள் நடந்தன. வைகாசி விசாகம் அவரின் நிறைவாலும் புகழ் கொண்டது.

அந்நேரத்தில் தேர்கள் அனைத்தும் சேர்க்கை சேராமல் இருப்பது உணர்ந்து வீரசேகர சுவாமிகளை மனதால் எல்லோரும் நினைந்து இழுக்க தேர்கள் நகரத் தொடங்கின. இத்தேர்களை வணங்கியபடி சீர் வளர் சீர் வீரசேகர சுவாமிகளின் முக்திப் பயணம் தொடங்கியது. நிறைவுபெற்றது.

அவரின் ஆலயம் கர்ப்ப கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் முதலானவற்றுடன் அமைக்கப்பெற்றது. இவருக்குப் பின் பட்டமேற்ற மகாதேவ ஞான தேசிகர் இவரின் ஆலயத்திற்கு பிரகார மண்டபம், உற்சவ மூர்த்தி ஆலயம், இராச கோபுரம், பதினாறு கால் மண்டபம் போன்றவற்றை எழுப்பினார்.

சீர்வளர் சீர் வீர சேகர சுவாமிகளின் ஐம்பதாம் ஆண்டு, திருவருள் திருவிழா 1961 ஆம் ஆண்டு நடத்தப்பெற்றது. திருக்களரில் நடந்த இவ்விழா குரு ஒருவருக்குச் செய்யப்பெற்ற உன்னத விழாவாகும். இவ்விழாவில் ஸ்ரீவீரசேகர புகழ் உரை ரச மஞ்சரி என்னும் நூல் வெளியிடப் பெற்றுள்ளது. மேலும் இவர் மீது பதிகம், நான்மணி மாலை, பிள்ளைத்தமிழ் முதலியன பாடப்பெற்றுள்ளன. இவரின் சரிதம் உரைநடையிலும் கவிதையிலும் வெளியிடப்பெற்றது. வீரசேகர மணிமாலை என்பதும் இவர் குறித்துப் பாடப்பெற்றுள்ளது.

நல்லன எல்லாம் தரும் சுந்தர காண்டம்

பகுதி-7

சூளாமணிப் படலம்

[89 பாடல்கள்]

முனைவர் சரசுவதி இராமநாதன்,
பள்ளத்தூர்

பேரறிவாளன், தூயவன், சொல்லின் செல்வன், இராமபிரானின் கையிலுள்ள கோதண்டத்தை நிகர்த்த அனுமன், “சீதையை எடுத்துக் கொண்டு ஸ்ரீராமனிடம் சேர்த்தலே நல்லது”, என நினைத்தான். ‘கோபப்படாமல் என் உரையைக் கேளுங்கள் தாயே! உங்களை இராமனின் முன்பு கொண்டுபோய்ச் சேர்க்க நினைக்கிறேன். என் மென்மயிர் அடர்ந்த தோளில் அமர்ந்து உறங்குக தாயே! உறங்கி விழிக்கையில் இராமன் முகத்தில் விழிப்பீர்கள். உங்களை இந்தநிலையில் பார்த்த பின்னும் வெறும் கையோடு போவேனா? இலங்கையையே பெயர்த்து எடுத்துச் செல்லவா? “அரக்கன் நாட்டில் அழுத கண்ணீருடன் உன் தேவியைப் பார்த்தேன்”, என்றால் என் அடிமைத் தனம் இராமனால் போற்றப்படுமா?

உன்னை உன் நாதனுடன் சேர்த்து வைத்தபின், நீங்கள் மகிழ்ந்திருக்கலாம். அதன் பிறகு அரக்கர் கூட்டத்தை அழிக்க இராமன் வரட்டுமே!

“ஆறுதுயர்! அஞ்சொல் இளவஞ்சி! அடியேன்தோள்
ஏறுகடிது! என்று தொழுது இன்னடி பணிந்தான்” (பாடல் 614)

பணிவாக மறுத்தாள்

‘அனுமனே! உன் ஆற்றலுக்கு இது மிக எளிதே! நீ சொல்வதும் சரியே! இருந்தாலும் என் சிற்றறிவு நினைப்பதை உன்னிடம் சொல்கிறேன்!. அரக்கர் உன்னை எதிர்த்தும் போரிட வந்தால் நீ என்ன செய்ய முடியும்! என்னைக் காப்பாற்றுவாயா! அவர்களோடு போரிடுவாயா! நான் அச்சத்தால் கடலில் விழுந்து விட்டால் அது மட்டுமல்ல!

“ஆரியன்
வென்றி வெஞ் சிலை மாசுணும்; வேறு இனி
நன்றி என்பது என்? வஞ்சித்த நாய்களின்
நின்ற வஞ்சனை, நீயும் நினைத்தியோ?!”

இராமன் கைவில்லுக்குப் வழி



வரலாமா! இராவணன் திருட்டுத்தனமாக என்னை எடுத்து வந்தது போல் நீ என்னை இராமனிடம் கொண்டு சேர்க்க நினைக்கலாமா!

போரில் என் இராமன் வெற்றிபெற்று, அரக்கனின் விழிகளைக் காகங்கள் கொத்த வேண்டாமா! நான் அதைப் பார்த்து மனநிறைவு கொள்ள வேண்டாமா? நாண் உடைய வில்லைக் கொண்ட இராம இலக்குவர் நாணமற்ற அரக்கியர் மங்கல நாண் அறுபடுமாறு வெற்றி பெறுவதை நான் பார்க்கவேண்டாமா? பொன் மயமான திரிகூடமலை மேலுள்ள இலங்கை, அரக்கர் எலும்புக் கூடுகளால் மற்றொரு மலையைப் பார்க்க வேண்டாமா? அது கிடக்கட்டும்.

"அல்லல் மாக்கள் இலங்கையது ஆகுமோ?

எல்லை நீத்த உலகங்கள் யாவும், என்

சொல்லினால் சுடுவேன்; அது, தூயவன்

வில்லின் ஆற்றற்கு மாசு என்று, வீசினேன்." (பாடல் 622)

சீதாதேவி சொன்னது சத்தியம். கற்பு நெருப்பால் நெருப்பைச் சுடும் ஆற்றல் படைத்த வீரசக்தி அவர். இராவணனையோ, இலங்கையையோ அழிக்க அவளது ஒரு சொல் போதுமே! ஏன் செய்யவில்லை. இராமனது கோதண்டம், தண்டமாகப் போகலாமா! அவருக்கு மாசு வரலாமா? அதனால் பொறுமைத் தவம் மேற்கொண்டிருந்தாள். சத்குரு தியாகராஜசுவாமி காம்போதிராகக் கீர்த்தனையில் 'மாஜானகி செட பெட்டக' என்றுபாடினார். இந்தக் கருத்து அதில் அழகுறக் காட்டப்பெறுகிறது.

ராமா, நீ இராஜராஜன், இராவணனை வென்றவன் என்ற புகழ் யாரால் வந்தது? எங்கள் சீதா தேவியை மணந்து, கைபிடித்ததால் தானே! தசமுகன் தசரத வார்த்தைகளைப் பேசிய போதே அவன் தலை சிதறுமாறு கோபத்தால் சபித்திருந்தானே ஆனால் உனக்குப் புகழ் கிடைத்திருக்குமா?" எனப்பாடுகிறார் சத்குரு. அவன் வந்து வெற்றிபெற்றுத் தன்னை அழைத்துச் செல்வது தான், அவனது வில்லாற்றலுக்கு ஏற்றது! இல்லாமல் நானே இங்கிருந்து மீண்டு சென்றால் இராகவன் வீரம் மாசுபடுமே

என அன்னை ஜானகி கருதியதை, அனுமனிடம் வெளிப்படுத்தினாள்!.

நீயும் ஆண் குரங்கு தானே

'வேறும் உண்டு உரை; கேள் அது; மெய்ம்மையோய்!

ஏறு சேவகன் மேனி அல்லால், இடை

ஆறும் ஐம் பொறி நின்னையும், "ஆண்" எனக்

கூறும்; இவ் உருத் தீண்டுதல் கூடுமோ!" (பா 623)

அனுமனே! ஐம்பொறிகளையும் வென்றடக்கிய உன்னையும் ஆண் குரங்கு என்று தானே உலகம் சொல்லும். இராமனைத் தவிர எந்த ஆடவனையும் நான் தொடமாட்டேன் யாரும் என்னைத் தொட முடியாது!

என்ன பார்க்கிறாய்! இராவணன் என்னை நிலத்தோடும் தொட முனைந்திருந்தால் இறந்திருப்பானே! பிரம்மன் 'உன்னிடம் விருப்பமில்லாதப் பெண்ணைத் தொட்டால் தலை வெடித்து விடும் என்று சாபம் அவனுக்குத் தந்தாரே' வீடணன் மகள் திரிசடை தான் எனக்கு அதைக் கூறினாள் அதனால் தான் அச்சமின்றி, உயிர்காத்து நிற்கிறேன். இளைய பெருமாள் கட்டிய பர்ணசாலை இது. உன் மெய்யுணர் கண்களால் பார்! அனுமனே! நான் இந்த இடத்தை விட்டு நீங்குவதே இல்லை! என்னைக் கொண்டு இராமனிடம் சேர்க்கலாம் என்ற எண்ணத்தை விட்டு நீ, இராம பிரானிடம் சென்று இங்குள்ள எனது நிலையைக் கூறி அழைத்து வருக.

அனுமனின் வேண்டுகோள்

'தாயே! இன்னும் கொஞ்ச நாள் உயிர்காத்து, இதே பொறுமையோடு இருங்கள். இராகவனிடம் நான் என்ன சொல்ல வேண்டும் கூறுங்கள்! என்றார். 'இன்னும் ஒரு மாதம் மட்டும் உயிரோடிருப்பேன். அத்துடன் என் தவம் முடிந்துவிடும். ஸ்ரீராமனை அழைத்து வந்து என்னை மீட்டுக் கொண்டு செல்ல ஆவனசெய் அனுமனே! என் நாதன் என்னை மனைவி என்பதற்காக வேண்டாம். ஓர் அபலைப் பெண்ணின் துயரைக் காக்கக் கூட வரவேண்டாம்! தன்வீரம் எத்தகையது என்று காட்டவரச் சொல்லு! இளைய பெருமானிடம், 'என்னைக் காத்து நின்ற அவர் தான் என்னை இலங்கைச் சிறையிலிருந்து மீட்டழைத்துச் செல்ல வேண்டும் என்று சொல்லுக. இராமச்சந்திரமூர்த்தி ஏதேனும் காரணத்தால் இங்கு வராமல் அயோத்தி மீண்டால் என் மாமியார் மூவருக்கும் என் வணக்கங்களை நீ தெரிவித்து உதவுவாயா மறந்துவிடாதே!

வரம் தந்தாரே

"வந்து எனைக் கரம் பற்றிய வைகல்வாய்,
"இந்த, இப் பிறவிக்கு இரு மாதரைச்
சிந்தையாலும் தொடேன்" என்ற, செவ் வரம்
தந்த வார்த்தை திருச் செவி சாற்றுவாய்"

இராமனைத் தவிர வேறு யாரும் இப்படி ஒரு வரம் தந்ததாகத் தெரியவில்லையே! வேறொரு பெண்ணைத் தொடமாட்டேன் என்று சொல்லவில்லை. சிந்தையாலும் தொடேன் என்றது தான் பெருமை. கையால் தொடாமலிருப்பது சூழ்நிலையால், அச்சத்தால் இருக்கலாம். சிந்தையால் தொடாமலிருப்பேன் என்றது தானே இராமனின் கற்பு! (புருஷோத்தமன் என்றது அதனால் தானே!)

கம்பனில் தோய்ந்த கவியரசர் கண்ணதாசன், ஒரு திரைப்படப் பாடலில் இந்தக் கருத்தை வாங்கிப் பாடிய வரிகளே! **"உன்னையல்லால் ஒரு பெண்ணை இனி நான் உள்ளத்தினாலும் தொடமாட்டேன்"** ஆகும். உளவியல் அடிப்படையில் மிக அழகான பாடலைக் கம்பன் தந்துள்ளார். உரிமை மனப்பான்மை

(தனக்கே தன் அன்புக்குரியவன்) என்ற நிலையில், என்னைத் தவிர வேறு ஒருத்தியை நினைக்கமாட்டேன் என்றாரே, அதை நினைவுபடுத்து என அனுமனிடம் சொல்கிறாள்! இங்கே நான் இறந்துவிட்டாலும் மீண்டும் பிறந்து இராமன் திருமேனியைத் தீண்டும் வரம் தரச்சொல் ஆஞ்சனேயா! இராமன் அரியணையில் அமர்ந்து முடிசூடும் அழகைக் காணப் பாக்கியம் இல்லாதவள் நான்! என்றெல்லாம் வருந்தி உரைத்தாள்.

நம்பிக்கை தந்த நல்லவன்

தேவி! நீ இங்கு துயர்ப்பட, இராமன் முடிசூட்டிக் கொண்டு மகிழ்ந்திருப்பானா அரக்கரை வதைப்பேன். என்று தாண்டக முனிவர்களுக்கு வாக்குத் தந்ததை மறப்பானா? தாயே! நீங்கள் துன்பத்தால் இங்கு உயிர்விட்டால், இராமனுக்குப் பழியும் பாவமும் என்றும் அழியாமல் நிற்குமே! அரக்கர் உடல்களால் கடல் தூர்ந்து போகும்; பார்ப்பாய்! குரங்குகளின் வலிமையை நீ காணத்தான் போகிறாய்! ஒரு மாதம் இனி நீ இங்கு துயர்ப்படத் தேவையில்லை! தாயே! நான் விரைவில் சென்று செய்தி சொன்னதும், கடல் போன்ற வானர சேனை இலங்கையில் வந்து நிற்கும். கருடன் மீது வரும் திருமால் போல, என் மீது இராம பிரான் அமர்ந்து வருவார். இவை நடக்காவிட்டால் இராமன் இராமலையன் இராவணன். (என் பெயரை மாத்தி வைத்துக்கொள்கிறேன் என்று பேச்சு வழக்கில் சொல்கிறது உண்டல்லவா!)

சீதை தந்த சூளாமணி

“சயந்தன் காக வடிவில் வந்து என்னைத் துன்புறுத்திய போது தருப்பையையே அஸ்திரமாக்கினார் இராமன். (வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பர்) மூவுலகம் திரிந்தோடிய காகம் எங்களிடமே சரண் அடைந்தது. ஒரு கண்ணைப் பொடியாக்கினார். அந்த வீரத்தை, வெற்றியை எண்ணி உயிர் காத்திருப்பேன். என் கிளிக்கு யார் பெயர் வைக்க? என்று நான் வினவ, ‘என்தெய்வம் ‘கைகேயி’ பெயரை வைக்கவும் என்றாரே! அந்தப் பண்பு மறக்க முடியாதது. ‘இதோ என் நெற்றி, வகிட்டில் வைக்கும் சூளாமணி இது. திருமண நாளில் எனக்குத் தாய் வீட்டுச் சீதனமாகத் தரப் பெற்றது. இராமன் கைமலரால் சூட்டப்பெற்றது என்று சொல்லி சூரிய ஒளியை விஞ்சும் ஒளிமிகுந்த அந்தச் சூளாமணியை அனுமனிடம் தந்தாள்.

“**சூடையின்மணி கண் மணி ஒப்பது**” நாடித் தேடி வந்து என் உயிர்காத்த உத்தமனே இதை எடுத்துச் சென்று இராமபிரானிடம் காட்டு” எனத் தந்தாள்

“தொழுது வாங்கினன்; சுற்றிய தூசினன், முற்றப்
பழுது உறாவகை பந்தனை செய்தனன்; வந்தித்து,
அழுது, மும்மை வலம் கொடு இறைஞ் சினன்; அன்போடு,
எழுது பாவையும், ஏத்தினள்; ஏகினன் இப்பால் (பா.693)

(சூளாமணிப் படலம் நிறைவு)

சமய எழுச்சியால் சமூக மறுமலர்ச்சி காட்டிய

அப்பர்

பகுதி – 3

திருத்தொண்டின் நெறிவாழ வருஞானத் தவமுனிவர் வாகீசர்!

திருமதி மு. சுப்புலட்சுமி,
வரலாற்றாய்வர்

ஆசிரியர்: www.glorioustamils.com, www.attraithingal.com,

வலையொலி/ podcast
அற்றைத்திங்கள்...

வலையொலியில் தமிழொலி

அப்பருடைய வாழ்க்கையை எழுதத் தொடங்கும் சேக்கிழார், ‘திருத்தொண்டின் நெறிவாழ வருஞானத் தவமுனிவர் வாகீசர்’ என்று முதல்பாடலில் குறிக்கிறார். திருத்தொண்டின் அகண்டபொருளைத் தம் வாழ்வாலும் பதிகங்களாலும் உலகிற்கு விளக்கிய வாகீசரை அறிமுகப்படுத்த, எவ்வளவு துல்லியமான சொல்தேர்வு!

அப்பர், ‘தொண்டுசெய்து என்றும் சோற்றுத்துறையார்க்கே உண்டுநீ பணிசெய் மடநெஞ்சமே’ (5.033.10) என்று முதலில், தொண்டின் சிறப்பைத் தம் நெஞ்சுக்குத் தெளிவுபடுத்தினார். பிறகு, ‘தொண்டீர்! ஆரூரமர்ந்தான் அடிநிழற்கீழ்ச் சாம்பலைப்பூசிச் சலமின்றித் தொண்டுபட்டு உய்ம்மின்களே’(4.102.01) என்று, இறைத்தொண்டர்களுக்கு வலியுறுத்தினார். திருத்தொண்டின் அளவற்ற ஆற்றலால் அடுத்து, ‘என் சொல் மறவேல் நமன் தூதுவீர்! கொண்ட பாணி கொடுகொட்டி தாளங்கைக்கொண்ட தொண்டரைத் துன்னிலுஞ்சூழலே(5.092) என்று, பதிகம் முழுதும் பலவாறாக நமன் தூதர்களுக்குக் கட்டளையிட்டார்.

இவையனைத்தையும் தாண்டி இறைவனிடமே, ‘நாட்பட்டு வந்து பிறந்தேனிறக்க நமன்றமர்தம் கோட்பட்டு

நும்மை மறக்கினுமென்னைக் குறிக்கொண்மினே (4.095.05) இவ்வுலகில் நெடுங்காலம் உயிர்வாழ்ந்துப் பின்னிறக்கும் விதியுடைய என்னைக் காலன் அழைக்கையில், நான் உம்மை மறந்தாலும் நீர் என்னைக் கருத்தில் கொள்ளவேண்டும்,' என்று வேண்டுகோள் விடுத்தார்.

சிலப்பதிகாரக் கானல்வரியில்,

'எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க
அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாம்மறக்க மாட்டேமால்,' (கானல் வரி 32, சிலப்பதிகாரம்)

'அடப்பங்கொடிகளே அன்னங்களே, தலைவர் நம்மை நினையாது போனாரோ. அவர் நம்மை மறந்தாராயினும் நாம் அவரை மறக்கமாட்டோம்,' என்று சொல்லும் தலைவியின் கூற்றில் தெரிவது, காதலின் நெகிழ்ச்சி. இறைவன்பால் காதலும் தன்னைமறந்த அன்பும் பத்திமையின் பகுதியே. இறையன்பர் அப்பரின் கூற்றோ தலைவி கூற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, நான் உம்மை மறந்தாலும் நீர் என்னை மறவாதிருக்க வேண்டும்,' என்று இறைவனுக்கே பெரும்பொறுப்பைத் தருவதாக அமைந்துள்ளது. பத்திமைத் தொண்டின் துணிவையும் வலிமையையும் உலகோருக்கு உணர்த்துவன நாவுக்கரசரின் சொற்கள்.

அதனால்தான், இன்தமிழ் மாலைபாடிக் கைத்திருத்தொண்டு செய்யுங்காதலில், திருக்குறுந்தொகைகள் பாடித் திருவுழவாரங் கொண்டு பணியாற்றிய அப்பரின் பல்வேறு பணிகளைச் சேக்கிழார், 'பெருந்திருத்தொண்டு' என்று குறிப்பிடுகிறார் (12.21.171). இறைவனை நாடிப் பரம்பொருளை உணர்ந்தோர், மக்களின் முன்னமர்ந்து அருள்மொழிகள் வழங்க, அப்பர்மட்டும் மக்களோடு மக்களாய் அவர்களுக்கிடையில் வியர்வைசிந்த உழைத்தபடி இறையுணர்வை வளர்த்தார்.

மக்களுள் ஒருவராகத் தம்மை எண்ணியபடியால் அவர்களோடு உரையாடியபடியே இருந்தார். அந்த உரையாடலில், தம்மைப் போன்ற ஒருவர் கடந்து வந்த கடினப்பாதையையும் கடப்பதற்குள் ஊனுருக உயிருருக அவருக்குள் ஏற்பட்ட பலவித உணர்வுகளையும் மக்கள் கண்டனர். விருப்பம்போல் வாழ்ந்து, தவறிழைத்து, துன்பப்பட்டு, அஞ்சி, பின் தவறுணர்ந்து, மன்றாடித் தொழுது, சிவனின்பால் பேரன்பு வளர்த்து, தொண்டாற்றி, இறைத்தொண்டின் திறத்தைத் தமக்கும் உணர்த்தும் அடியாரை, தம்முள் ஒருவராகவே அவர்கள் பார்த்தனர்.

போராட்ட வாழ்வில் சிவநெறியை அழுந்தப்பற்றி வெற்றிகண்ட வாகீசர், தூய மனத்தினராய் நாடும் மக்களைத் தேடிவந்து அருள்புரிபவர் சிவபெருமான் என்ற கருத்தைத் தம் பாடல்களில் அழுத்தமாக விதைத்தார். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற இறைவனை அடையும் வழிகளில், அன்பொன்றை மட்டுமே மனதில்வைத்து உழைப்பை உடலில்வைத்து எளியோரும் சிவனருள் பெறும்வழியைக் காட்டினார். பெரிய வித்தைகள் இல்லாது, குழப்பங்கள் ஏதுமின்றி, உடல்

தூய்மையோடு ஆலயத் தூய்மையிலும் இறைவழிபாட்டு முறைகளிலும் கவனம் செலுத்தச் சொன்னார்.

கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக்கன் பில்லையேல்
ஓடு நீரினை யோட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே (5.099.09)

கோடிதீர்த்தங்கள் கலந்து குளித்து நீராடினாலும், இறைவனிடத்தில் அன்பு இல்லையேல், ஓடும் நீரை ஓட்டைக் குடத்தில் மூடிவைத்த மூர்க்கனின் செயலையே அது ஒக்கும், என்று உறுதியாக முழங்கினார்.

கோயில்களுக்கும் அதிலுறையும் இறைவனுக்கும் மக்கள் செய்யவேண்டிய தொண்டுகளைத் தெளிவாகப் பட்டியலிட்டுக் காட்டினார் அப்பர். ஒன்றுகூடி அனைவரும் தொண்டாற்றும் அன்புத்தலம் கோயிலென்றும், சமூகப் பிரிவுகளில் ஏற்றத்தாழ்வுகள் ஏதுமின்றி இறைவனை உடலால் நெருங்கி

திருநல்லம்

உணர்வால் இணக்கமுறும் இன்பக்களம் இறைவழிபாடு என்பதையும் ஐயமின்றி வெளிப்படுத்துவன அவர் பதிகங்கள். இந்த வழிகாட்டலே, கோயில்களைப் பராமரித்து உடலுழைப்பாலும் உள்ளன்பாலும் ஏற்றத்தாழ்வின்றி இறைவழிபாட்டில் பங்கேற்க, ஏழாம் நூற்றாண்டுத் தமிழ்ச் சமூகத்தை வழிநடத்தியது.

திருநாவுக்கரசர் தம் பாடல்கள் பலவற்றில், கோயில்சென்று இறைவனை வழிபடும் முறைகளைக் கூறியுள்ளபோதிலும், திருவையாறு(4.003), இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை (5.095), திருக்கன்றாப்பூர்(6.061), திருஅங்கமாலை(4.009) என்ற நான்கு திருப்பதிகங்களில், பட்டியலிட்டுப் புரிந்துகொள்ளுமாறு மிக அழகாக வழங்கியுள்ளார். அந்தப் பாடல்கள், அன்பர்கள் உணர்ந்து செயலாற்ற ஏதுவான வழிபாட்டுக் கையேடாக இன்றளவும் கொள்ளத்தக்கன என்பது வேறெந்த நாயன்மார் பாடல்களிலும் காணகிட்டாத இறைத்தொண்டில் சமூகத்தொண்டு.

திருவையாறு

அப்பர் பெருமான் உமையோடு வீற்றிருக்கும் இறைவனைக் கயிலாயத்தில் காணவேண்டி, கால்கள் தேய கைகளும் மணிக்கட்டுகளும் கரைந்து சிதைய மார்புத் தசைகள் தேய்ந்து சிதற எலும்புகள் முறிந்தாலும் அன்புநிறைந்த சிந்தையோடும் தளராத உள்ளத்தோடும் கடினப் பாதைகளைக் கடந்து செல்கிறார். திருத்தொண்டர் வேறெவரும் படாத இன்னல்மிகு உடல்வருத்தம் இது. நண்பர் சேரமானோடு சேர்ந்து கயிலையடைந்த

சுந்தரரின் வாய்ப்பும் அப்பருக்குக் கிட்டவில்லை. உடலால் தேய்ந்து சிதைந்த அப்பர், சிவனார் பணித்தபடியால் யாதொரு சுவடும்படாமல் ஐயாறடைந்து, 'மாதர் பிறைக்கண்ணியானை' என்று தொடங்கும் திருவையாற்றுப் பதிகம் (4.003) பாடுகிறார். கயிலைக்குச் செல்லாது தமிழ்மண்ணில் மறுபடி கால்பதித்ததால் அப்பரைக்காட்டிலும் பயனடைந்தது தமிழ்ச்சமூகந்தான்.

ஈடற்ற இணையரான வண்டுலாவுங்குழல் மலைமகளையும் அண்டர்நாயகரையும் வடகயிலையில் காணவியலாமல் திருவையாற்றில் காணச்செல்லும் அப்பர், தாம்கண்ட பல்வேறு இணைகளைச் சுவைபடச் சொல்வதை வியக்காமல் எங்ஙனம் இருப்பது? திருவையாற்றில், காதல் மடப்பிடியோடு களிறு, பேடையொடு வரிக்குயில், சேவல், மயில், மான், நாரை, பைங்கிளி, பசுவைத் தழுவிய ஏறு ஆகியன வருவதைப் பதிகத்தில் பாடுகிறார்.

இவ்வளவு சுவையுடன் பாடப்பட்ட பதிகத்தில், அடியார்கள் இறைவனைப் பரவும் வழிகளையும் வரிசையாகக் காட்டுகிறார் அவர். அதிகாலையில் எழுந்து மலர்க்கொய்து, முழுமையாக மலராத மொட்டுக்களுடன் நீர்ச்சுமந்து, 'வாழி' 'போற்றி' என்று ஏத்திச் சுழன்றாடி, ஆடலுக்கேற்பத் தாளமிட்டுமாடி, நீர்த்துறையில் வளர்ந்த பல்வேறு மலர்களைக் கொணர்ந்து தூவித்தொழுது, பாடியுமாடியும் இறையடியே நினைந்து உணர்ந்துருகிக் குழைந்து தொண்டர்கள் வழிபட்டதையும், இனிவருவோர் வழிபடுமாறும் உணர்த்துகிறார்.

இங்குற்றேன் என்று

இலிங்கத்தே தோன்றியவன்

செங்க ணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலர்
இங்குற் றேனென்றி லிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே (5.095.11)

திருமாலும் நான்முகனும் எங்குந்தேடியும் செஞ்சடை மூர்த்தியைக் காணமுடியவில்லை. ஏன் காணமுடியவில்லை என்று பதிகத்தில் வரிசையாகப் பட்டியலிடுகிறார் அப்பர். "தேடித்திரிந்துணர்ந்தோர், நான்முகனும் திருமாலும் மட்டுந்தானா? நீங்களுந்தான் சற்றே ஆழ்ந்து இப்பதிகத்தைத் தேடுங்களேன்..," என்று நமக்கும் தேடும் பணியைத் தருகிறார் வாகீசர். தேடினால் கிடைப்பதோ பெரும்புதையல்.

திருமாலும்நான்முகனும்,இறைவனுறையும் கோயில் புகுந்து, மகிழ்வுடன் மணமிக்க மலர்களைக் கொய்து, அம்மலர்களைச் சிவனாருக்கு விருப்பத்துடன் அளித்து வணங்கவில்லை; இறைவனைப் பூவும்நீரும்கொண்டு திருமுழுக்கிட்டு, திலகமிட்டுச் சுற்றியும் வரவில்லை; பசுவின் சாணம்கொண்டு கோயிலைத் திருமெழுக்கிடவில்லை; பூக்கள் நிரம்பிய கூடையைச் சுமந்து வரவில்லை; நெய்யும் பாலும் கொண்டு திருமுழுக்கிடவில்லை; பொய்யும் வஞ்சகமும் நீக்கிப் புகழ்ந்திடவில்லை; எருக்கம்பூவை மாலையாக்கிச் சூடிவிடவில்லை; தாங்கள் கோவணம் அணியவுமில்லை, மரங்களில்

ஏறி மலர்பறிக்கவுமில்லை; நிரம்ப நீர்ச்சுமந்து திருமெழுக்கிட்டு சிவனாரை நினைக்கவில்லை; எட்டுறுப்புக்களும் நிலத்தில்படுமாறு வீழ்ந்து வணங்கவில்லை; திருநீறு விளங்குமாறு அணியவில்லை, மணமிக்க மலர்களால் தலைமாலை புனையவில்லை; அன்றலர்ந்த குவளை மலர்களைப் பிளந்து அவற்றின் இதழ்களைப் பிணைத்தும் தொடுத்தும் திருவடியிலிட்டு வணங்கவில்லை; உருத்திராக்கமாலை அணிந்து, சங்கை வாயில்வைத்து ஒலியெழுப்பி வழிபடவுமில்லை.

இத்தனை வழிபாட்டு முறைகளையும் கடைப்பிடிக்காததால்தான் திருமாலும் பிரம்மனும் தேடித்திரிந்தும் சிவனைக் காணாது நின்றனர் என்பது பதிகத்தில் பொதுவாகக் கொள்ளப்படும் எளிய பொருள். “இவையனைத்தையும் வாழ்க்கை முறையாக வழுவாது ஏற்றீர்களானால், திருமாலுக்கும் நான்முகனுக்கும் காணக்கிடைக்காத அழல்நிற வண்ணனை நீங்கள் காணலாம்”, என்று பதிகத்துள் தேடியுணரும்வண்ணம் செய்திகளை வைத்து, புன்னகைக்கிறார் அப்பர்.

திருக்கன்றாப்பூர்

திருக்கன்றாப்பூர் திருப்பதிகத்தின் (6.061) பாடல்கள் அனைத்தும் ‘தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே,’ என்று முடிகின்றன. இறைவன் எங்கிருக்கிறான் என்ற மிகப்பெரிய வினாவுக்கு எளிமையான ஆனால் அழுத்தமான விடையைப் பகிர்கிறார் இறைவனுறையுமிடம் அவரைத் தொழுமடியாரின் நெஞ்சமேயாம். இவ்வகையில், பேரன்பை மனத்தில்வைக்கும் தொண்டரையும் அந்த அன்புக்கு மதிப்பளிக்கும் இறைவனையும், சமமாய் உயர்த்தித் தாங்கிய தகைமை நாவுக்கரசருக்கே உரியது.

என்னென்ன நற்செயல்கள் புரிந்து, பணியாற்றித் தொழுமடியார்? என்ற கேள்வி படிப்போருக்கு வருவது இயல்புதானே! இறைவனைத் தொழும் அடியார்கள் இயல்புகளைச் சொல்லும் அதே நேரத்தில், எதையெல்லாம் செய்தால் இறைவனைக் காணலாம் என்பதை மேலும் விரிவுபடுத்துகிறார். எளியோரும் ஆற்றக்கூடிய இறைத்தொண்டோடு, சிவனடியாரைச் சிவனெனவே போற்ற வேண்டியதை வலியுறுத்தும் பதிகம் இது.

- நாதனேயென்று பரவி நெஞ்சுருகி வஞ்சமிலா அன்போடு, முப்பொழுதும் பூவும் நீரும் கொண்டு நாள்தோறும் வாழ்த்தியேத்தித் தொழுமடியார்;
- விடிந்ததுமே வெண்ணீற்றை மெய்யிற்பூசி வெளுத்த கோவணமுடுத்தி இறைவனைப் போற்றி, நறுமண மலர்களைத் தூவித் தொழுமடியார்;
- திருநீறணிந்து, உருத்திராக்கம் பூண்டிருப்பவரைக் கண்டால், ‘இவர் வழிபடத்தக்கவரா வழிபடத்தகாதவரா?’ என்ற ஐயத்தின் அடிப்படையில் மனிதருள் வேறுபாடு காட்டாது, இறைவனுக்குத் தொண்டு செய்வதுபோலவே அவர்களையும் தொழுமடியார்;
- இது மற்றவர்களுக்கு உதவும் காலமல்ல, நல்ல நாளல்ல என்றெல்லாம் நினையாமல், அனைவருக்கும் ஈந்து, நல்வழிநின்று, பொய்யின்றி மெய்யன்புடன் தொழுமடியார்;
- இறைவனைப் பலவாறாக வாழ்த்தி, புலனைந்தும் அடக்கி, உள்ளன்பால்

தொழுமடியார்;

• இறைவனின் அஞ்செழுத்தை நெஞ் சுருகித் தொழுமடியார்;

• அகங்குழைந்து மெய்சிலிர்த்து இறைவன் தாளைக் கையினால் தொழுமடியார்;

• மனவுறுதியால் ஐம்பொறிகளையும் அடக்கி, மனங்கலங்காமல் 'சிவாயநம வென்னுஞ் சிந்தைச்சுருதிதனை' மனதில் வைத்து, தொழுமடியார் நெஞ்சினுள்ளே இறைவனைக் காணலாம்.

இப்படி, இன்றளவும் தொடரவேண்டிய சிவத்தொண்டரின் கடமைகளைச் சமூகநோக்குடன் தெளிவாக எடுத்துச்சொன்னவர், ஏழாம் நூற்றாண்டில் சைவத்தை நிலைநாட்டவந்த வாகீசர்.

திருவாரூர்

'மதிதருவன் நெஞ்சமே' என்று, தன் நெஞ்சுக்கு அறிவூட்டப் பாடப்பட்டது திருவாரூர் திருப்பதிகம் (6.031). "அம்மானே ஆருரெம்மரசே; பிழைத்ததெலாம் பொறுத்தருள்செய் பெரியோய்; உற்றவரும் உறுதுணையும் நீயே; உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கேன்," என்று பதிகம் முழுதும் பலவாறாகப் போற்றித் துதிக்க மனதிற்கு வழிகாட்டுகிறார்.

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா

நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்

புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்

பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்

தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்

சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்

அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்

ஆரூரா என்றென்றே அலறா நில்லே (6.031.03)

தஞ்சை இராஜராஜீசுவரம்

"நாள்தோறும் எம்பிரான் கோயிலுக்குச் சென்று, விடிவதன்முன் குப்பைகளை நீக்கி, நீரிட்டு மெழுகி, பூமாலை தொடுத்து, இறைவனைப் புகழ்ந்து பாடி, தலையால் கும்பிட்டு, கூத்தாடி, சங்கரா சய போற்றி போற்றி என்று ஆரூரனை அழைத்து வழிபடுவாயாக," என்று அன்பர்கள் செய்யவேண்டிய எளிய நெறிகளைக் கூறுகிறார். மேலும், 'அம்மானே ஆரூரெம் ஐயாவென்று துதிசெய்து மலர்த்தூவி, கோயிலை வலஞ்செய்து தொண்டர்களைப் போற்றி இறைவனை' நாடவேண்டிய முறையை இயம்பிகிறார் (6.031.08).

திருக்கடவூர் வீரட்டம்

கடவூர் வீரட்டானப் பதிகத்தில் (4.031), விளக்கேற்றி தூபமிட்டு வழிபடும் திருத்தொண்டுகளைக் குறிப்பிடுகிறார்.

பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்த ராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை யுள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினா லிடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார் கடவூர்வீ ரட்ட னாரே (4.031.04)

புலரும் பொழுதில் நீராடி அரும்போடு மலர்கள் கொண்டு, விளக்கும் தூபமுமிட்டு வழிபடுவோருக்கு, வெல்லக்கட்டிப்போல இனியவர் கடவூர் வீரட்டனார், என்று சுருங்கச் சொல்கிறார்.

அதேபோல் விடியும்பொழுதில், தூபமூட்டியில் கனலில் குங்கிலியப்புகை காட்டி, இறைவனுக்குச் 'சங்கொலிப்பித்திடுமாறும்' (4.102.10), 'நகமெலாந் தேயக் கையால் நாண்மலர் தொழுது தூவி' (4.040.08) வணங்குமாறும் அடியவர்களுக்குக் கூறுகிறார்.

திருவங்கமாலை

நாவுக்கரசர் பதிகங்களில் திருவங்கமாலைக்குத் தனிச்சிறப்புண்டு. சரியையும் கிரியையும் கொண்டு உடல் தேயத்தேயத் திருத்தொண்டாற்றி உள்ளத்தெளிவும் திண்மையும் பெற்றபின், யோகமும் ஞானமும் கைக்கூடியதைப் பறைசாற்றுவதே தன் உடலுறுப்புக்களை வசப்படுத்திக் கட்டளையிடும் திருவங்கமாலை. தான் செய்ததை உள்ளன்புடைய எவரும் செய்யவியலும் என்று தம் வாழ்நாள்முழுக்க அவர் சொல்லிவந்தது அங்கமாலைக்கும் பொருந்தும்.

திருவையாற்றில் தங்கிப் பதிகங்கள் பாடி, அருகிலிருக்கும் திருத்தலங்களுக்குச் சென்று, திருப்பணிகள் செய்து, திருப்பூந்துருத்தியை அடைந்த நாவுக்கரசர், 'செல்கதி காட்டிடப் போற்றும்' உலகத்து யிர்கள் இறையடியை அடையும் வழியைக் காட்டும் திருவங்கமாலையைப் புனைந்தார், என்கிறார் சேக்கிழார்.

"தலையில் தொடங்கிக் கண், செவி, மூக்கு, வாய், நெஞ்சு, கைகள், கால்கள் என்று உடலின் உறுப்புகள் ஒவ்வொன்றாலும் மனிதன் தன்னைப் படைத்த எம்பெருமானுக்குச் செய்ய வேண்டுவதெல்லாம், செய்யக்கூடியதெல்லாம் சொன்னார். தமிழ்நாட்டில் அவருக்கு முன்போ அல்லது தொடர்ந்தோ யாரும் காட்டிடாத ஒப்பற்ற வழிமுறைகளைக் கூறும் அப்பரின் திருவங்கமாலை, அவரை அடையாளம் காட்டும் அற்புதமான பதிகமாய் அமைந்தும், அதிகம் பேசப்படாத பதிகமாகவே விடுபட்டுப்போனது," என்று வரலாற்றறிஞர் டாக்டர் இரா. கலைக்கோவன் பதிவு செய்கிறார் (அப்பர் எனும் அரிய மனிதர், பகுதி 2; வரலாறு.காம்).

அன்பர்கள் வழிபடவேண்டிய முறைகளைத் தொகுத்தளித்தும், அக்காலத்தே வழிபட்ட முறைகளை நமக்குக் காட்டியும், தமிழகப் பத்திமை இயக்க வரலாற்றின் பல பரிமாணங்களைப் பின்வந்தோர் புரிந்துகொள்ளப் பெருந்தொண்டாற்றியவர் அப்பர்.

தலைமாலை தலைக்கணிந்த தலைவனைத் தலையானது வணங்கவும், எண்டோள் வீசி நின்றாடும் பிரானைக் கண்கள் காணவும், செம்பவளத்தையும் தீயையுமொத்த திருமேனி கொண்ட

பெருமானின் பண்புகளை எப்போதும் செவிகள் கேட்கவும், இடுகாட்டில் உறையும் முக்கண்ணனைப் போற்றி மூக்கு முரலவும், மதயானையின் தோலுடுத்திப் பேய்கள்வாழ் காட்டகத்தே ஆடும்பிரானை வாய் வாழ்த்தவும், செஞ்சடையுடைய தூயவனை நெஞ்சம் நினைக்கவும், பாம்பை இடையில் கட்டிய பரமனைக் கைகள் சிறந்த மலர்கள் தூவித் தொழுதிடவும் பதிகத்தில் பணிக்கிறார் அப்பர்.

மேலும் விரிவாக விளக்குபவர் 'கோயிலை வலம்வந்தும் பூக்களால் அருச்சித்தும் போற்றாத உடலால் என்ன பயன்? கறைக்கண்டன் உறையும் கோபுரமுடைய கோயிலைச் சுற்றிவராத கால்களால் என்ன பயன்?', என்று கோயிலை வலம் வந்து அனைவரும் பூக்கொண்டு இறைவன் தாள்பற்றி வழிபடுவதை வலியுறுத்துகிறார்.

கண்கள் தொடங்கி உறுப்புகளெல்லாம் இறைவனையே நாடிப் போற்றிட, கோயிலை வலம்வந்து, பூக்கள் படைத்து தொழுதாகிவிட்டது. அடுத்தென்ன? இறைத்தொண்டின் அடுத்த படிநிலை இறைவனை அடைதல்தானே? அடுத்தடுத்து வருவனவற்றை விளக்கவரும் திருவங்கமாலையின் இறுதி மூன்று பாடல்கள் நெஞ்சுருக வைப்பவை. 'கூற்றுவன் நம்முயிரை எடுத்துப் போகும்பொழுது, குற்றாலத்துறை கூத்தனல்லால் நமக்கு உற்றார் யாருளரோ?,' என்று உளம்நெகிழ்கிறார். இறைவன் ஒருவனையே ஒருமுகப்படுத்தி உள்ளொளி பெருக்கும் யோகநிலையை அடைந்து, 'அவனல்லால் யாருளரோ?" என்று குற்றாலக்கூத்தனை உள்ளே நிறுத்துகிறார். அதன்பின், பித்தன்மேல் பற்றுடைய பத்தராக 'கூற்றுவன் கொண்டுசென்றபிறகு, ஈசன் திருவடிக்கீழ் சிவகணங்களுள் ஒன்றாக இறுமாந்திருப்பேனோ?,' என்று சிவகணமாகவே அமர்ந்துவிட்டார் அவர்.

எங்கும் எதிலும் நிறைந்தவனாக இறைவனை உணர்ந்து, அவ்வுணர்வுத் தெளிவால் தன்னுள்ளே அவரைக் காணக்கூடும் உயர்நிலையே ஞானம் என்பர் பெரியோர். திருஅங்கமாலையின் இறுதிப்பாடலில் 'தேடிக் கண்டுகொண்டேன் திருமாலொடு நான்முகனும் தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே தேடிக் கண்டுகொண்டேன்', என்று தன்னுள்ளே இறைவனை ஞானநிலையில் கண்டுதெளிந்ததை நெகிழ்ந்து பாடுகிறார் அப்பர்.

இறையருளைத் தேடும் உலகவாழ்வுக்கும், அவன் இணையடிச்சேரும் அமரவாழ்வுக்கு மிடையில் எத்தனையெத்தனை போராட்டங்கள், மனக்குழப்பங்கள், உளவியல் மாற்றங்கள், உணர்வலைகள், நெகிழ்வும் மகிழ்வுமூட்டும் தருணங்கள்? அத்தனையும் ஒன்றுவிடாமல் நம்மிடையே அமர்ந்துப் பகிர்ந்துகொள்கிறார். அந்த நெகிழ்விலும் மகிழ்விலும் தாம்சார்ந்த சமூகத்தின் மேம்பாட்டுக்குரியவற்றைப் பாடுவதை அவர் பொறுப்பாக எண்ணினார். அதனால்தான், தவறான பத்திமைப் புரிதல்களைச் சாடவும் அவர் தவறவில்லை.

அப்பரின் புரட்சிக் கருத்து

இறைவனுக்குத் தொண்டாற்றும் பலவித நெறிகளைத் தெளிவாகக் காட்டிய திருநாவுக்கரசர், ஒரு மிகப்பெரிய புரட்சிக் கருத்தை விதைக்க முயற்சித்திருக்கிறார்.

அஞ்செழுத்தை ஓதியுணர்வோருக்

கிடையில் பேதமின்றி, உமையுடன் உள்ளத்தில் மகிழ்ந்திருப்பார் இறைவன் (திருமாற்பேறு, 5.060.01) என்று பத்திமையில் அனைவரும் சமம் என்ற கருத்தை வலியுறுத்துகிறார்.

அதே பதிகத்தின் மற்றொரு பாடல் –

சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்தி ரமுங் குலமுங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்கு ளருளுமாற் பேறரே (5.060.03)

சாத்திரம் கோத்திரம் குலம் என்பவற்றால் என்ன பயன்? பணியவேண்டியது சிவனிடத்தில் என்றுணர்ந்து பணிந்தீர்களானால், மாத்திரையளவு நேரத்தில் அவர் அருளுவார், என்று ஆணித்தரமாக உரைக்கிறார். ஆனால், அப்பரின் இந்த அழுத்தமான கருத்துக்கு, சமூகம் இன்றுவரையில் செவிமடுத்ததாகத் தெரியவில்லை. இறைவனின் அளவில்லா அருளைக்காட்டிலும் பெரிதாகிப்போன மனிதமனங்களின் வேறுபாட்டுணர்வே, அப்பரின் உயரிய புரட்சிக் கருத்து இன்றளவும் வெற்றிகாணாதிருப்பதன் காரணம்போலும்.

ஒரு படைப்பாளரின் எண்ணத்தெளிவு அவர்தம் எழுத்தில் மிளிரும். சமூகத்தின்பால் தமக்குரிய பொறுப்புகுறித்த அப்பரின் தெளிவே, அவர்தம் பதிகங்களை நாம் படித்துவியப்பதற்கான முதன்மைக் காரணி. கோயில் வகைகளைத் தேர்ந்த ஆசானைப்போலப் பட்டியலிட்டு வழங்கியவர், கோயில்சென்று இறைவனை வழிபடும் முறைகளையும் அவ்விதமே தொகுத்தளித்துள்ளார். அவ்வகையில், ஒரு வரலாற்றாசிரியராகவும் ஏழாம் நூற்றாண்டுத் தமிழகத்தின் இறைவழிபாட்டு முறைகளைத் துல்லியமாகக் காட்டியவர் திருநாவுக்கரசர்.

இறைவழிபாட்டிற்குத் தேவையானவற்றை அவர் பட்டியலிட்டதில், பூக்களுக்கு வேண்டிப் பூங்காக்களும், தூய்மைக்கு வேண்டி உழவாரப் பொருட்களும், மெழுக்கிடவேண்டித் தெளிநீர்க் குளங்களும், தொண்டர்கள் பசியாரச் சைவமடங்களும் புத்தொளி பெற்றுப் பெரும்பணியில் அமர்ந்தன. மக்கள் கூட்டத்தை இறைத்தொண்டிலும், கோயில் பராமரிப்பிலும் ஈடுபடச் செய்த சமயமுன்னோடி என்பதோடு, பொறுப்புடன் மக்கள் தொண்டாற்றுதலே இறைத்தொண்டு என்று கிளிப்பிள்ளைக்குச் சொல்வதுபோல் சொன்னதில் சமூகமுன்னோடியாகவும் தனித்தொளிர்கிறார் அப்பர்.

சிவத்தொண்டில் மக்களை ஈடுபடவைத்து, தொண்டருக்கென்று அக்காலச் சமூகத்தில் பெருமைக்குரிய இடத்தைப் பெற்றுத் தந்தவர் நாவுக்கரசர். அவர் பாடல்களால் இன்றும் அவர் பேசிக்கொண்டிருக்கிறார்.

நன்றி: டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி.

துணைநூல்கள்

சேக்கிழார், பெரிய புராணம்

டாக்டர் இரா. கலைக்கோவன், அப்பர் எனும் அரிய மனிதர், பகுதி 1,2,3;

வரலாறு.காம்

திருப்புகழில் சைவசித்தாந்தம்

(பகுதி-2)

டாக்டர். வ.ஜெயபாலன்
ஈப்போ, மலேசியா

உடலுக்குத் தேவையான உணவைப் பக்குவப்படுத்தும் முறை சமையல். மனிதனின் ஆன்ம ஈடேற்றத்துக்காக அவன் மனதைப் பக்குவப்படுத்தும் வாழ்க்கை முறை சமயம்.

இறைத் தன்மையை நோக்கி இந்த ஆத்மா பயணிக்கும் நெறியை உணர்த்துவது சமயத்தின் இலக்கணம். சைவசமயம் இந்த இலக்கணத்தின் முழு வடிவம்.

சைவத்தின் தொன்மை

உலகில் 3000 வருடங்களுக்கு மேல் தொன்மை வாய்ந்ததாகக் கருதப்படும் சிந்துவெளி நாகரிகத்தின் சுவடுகள் சைவர்களின் முழுமுதற் கடவுளான சிவ வழிபாட்டினையே இன்றும் நமக்கு நினைவுறுத்துகின்றன.

தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்திலும், திருமுருகாற்றுப்படை, புறநானூறு, பரிபாடல் போன்ற சங்க இலக்கியங்களிலும் பரம்பொருளான சிவனின் அடையாளங்களே இறைவனின் இயல்புகளாகக் கூறப்பட்டுள்ளன.

“நன்று ஆய்ந்த நீள் நிமிர் சடை முதுமுதல்வன்’’ என்றும் “பால் புரை பிறை

நுதல் பொலிந்த சென்னி நீல மணிமிடற்று ஒருவன்” என்றும் கூறி சிவபெருமானின் அடையாளங்களையே, இறைவனுக்குரிய அடையாளங்களாகப் புறநானூறு பதிவு செய்கின்றது.

சிவனைப் பற்றிய சிந்தனை இருந்த தொல்காப்பிய காலத்திலேயே, சைவசமயத்தின் அடிப்படைத் தத்துவமான சைவசித்தாந்தத்தைப் பற்றிய சிந்தனைகளும் இருந்தன என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. ஆனாலும், கி.பி.5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமூலரால் இயற்றப்பட்ட திருமந்திரத்தில்தான் “சைவ சித்தாந்தம்” என்ற சொல் முதன்முதலில் கையாளப்படுகிறது. (திருமந்திரம் 1421)

தேவார திருவாசகப் பாடல்களிலும் சைவ சித்தாந்தக் கருத்துகளையே முதன்மையாக வைத்து சமயக்குரவர் நால்வர் பக்திரசம் சொட்டப் பாடினர். ஏனைய திருமுறைகளும் சைவ சித்தாந்தத்தையே அடிப்படையாகக் கொண்டு எழுதப் பெற்றன. இந்த நிலையில், கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மெய்கண்டார் தாம் அருளிய ‘சிவஞான போதத்தில்’ சைவ சித்தாந்தத்தை 12 சூத்திரங்களாலும் 40 வரிகளாலும் பதி பசு பாசம் என்ற சைவத்தின் அடிப்படைத் தத்துவங்களை விளக்குகிறார்.

அவரைத் தொடர்ந்து, அருள் நந்தி சிவம், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் ஆகியோர் சைவ சித்தாந்தத்தைச் சூத்திரங்களாகத் தந்தனர். இவர்கள் நால்வரும் சைவ சித்தாந்தத்தை நிலைநாட்டிய சந்தானக் குரவர்கள்.

அருணகிரிநாதரின் தோற்றமும் – நோக்கமும்

அடுத்து, 15ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் இஸ்லாமியர்களின் படையெடுப்பாலும் பௌத்தம், சமணம் போன்ற பிற சமயங்களின் தாக்கத்தினாலும் சைவமும், வைணவமும் நிலைகுலையும் நிலை ஏற்பட்டது. பாமர மக்களைச் சித்தாந்த சாத்திரங்கள் கவரவில்லை.

சைவ வைணவப் போராட்டத்தினால், இரண்டு சமய நெறிகளுமே வளராத நிலை வந்தது. எளிய மக்களிடையே சிறு தெய்வ வழிபாடுகளும் பெருகின. இக்கால கட்டத்தில் தான், அருணகிரிநாதர் தோன்றினார்.

பிளவுபட்டிருந்த சைவம், வைணவம், சாக்தம் ஆகிய முப்பெரும் பிரிவுகளை முருகன்’ என்ற ஆறுமுகச் சிவனின்

மூலமாக ஒருங்கிணைக்க திருப்புகழையும் ஏனைய நூற்களையும் இயற்றினார்.

“திருமகள் உலாவும் மிருபுய முராரி திருமருக நாமப் பெருமாளே” என்றும் “சிவகாமி நாயக திருக்குமாரனே” என்றும் முருகனை வைணவத்தோடும், சைவத்தோடும் இணைத்துப் பாடினார்.

முருகனே சிவபெருமானின் புதல்வன், திருமால் மருமகன், சக்தியின் புதல்வன், இலக்குமியின் மருமகன், வள்ளியின் கணவன் என்று எல்லாத் தெய்வங்களையும் உறவு பாராட்டி அதே சமயம் முருகபக்தி என்னும் கற்பு நெறியும் தவறாமல் நம்முடைய சமய உலகின் எல்லைகளை விரிவுபடுத்துகிறார்.

இவற்றை எல்லாம் எளிய மக்களிடம் கொண்டு செல்ல இசையையும் சந்த நயத்தோடு கூடிய தாளத்தையும் பயன்படுத்துகிறார்.

திருஞானசம்பந்தரைப் போல அமிர்த கவித் தொடை பாட ஆசை கொண்ட அருணகிரிநாதர், முருகன் குடிகொண்ட தலங்களுக்கெல்லாம் சென்று திருப்புகழ் பாடுகின்றார்.

ஆறுமுகச் சிவன்

கந்த புராணத்தில் கச்சியப்பர் பாடியதைப் போல, ஐந்து முகச் சிவனும், ஆறுமுகச் சிவனும் ஒருவரே என்கின்ற தொன்மையான கொள்கையைத் திருப்புகழிலும் நிலைநாட்டுகின்றார் சிவஞான பானுவாகிய அருணகிரிநாதர். தில்லையில் கோயில் கொண்ட நடராஜப் பெருமானைப் பாடும் பொழுது கூட, “கனகசபை மேவும் எனது குருநாத கருணை முருகேசப் பெருமாள்காண்” என்று முருகப்பெருமானாகவே காணுகின்றார். செந்திற்பதியில் முருகனிடம் சிதம்பரத்தில் காட்டியருளிய கோலத்தினை இங்கும் காட்டியருள்க’ என்று வேண்டி அவ்வாறே காட்டப் பெற்று

மகிழ்கிறார்.

மேலும் பல்வேறு பாடல்களில் சிவபெருமானின் திருவிளையாடல்களை முருகனின் மீது ஏற்றிப் பாடுகிறார். முப்புரம் எரித்தவர் சிவபெருமான் என்பது திருவிளையாடல் புராணம். ஆனால், திருப்புகழில் முருகனைப் போற்றுமிடத்தே,

“சிவசிவ அரகர தேவா நமோ நம
தெரிசன பரகதியானாய் நமோ நம
திசையிலும் இசையிலும் வாழ்வே நமோ நம செஞ்சொல் சேரும்
திருதரு கலவி மணாளா நமோ நம
திரிபுரம் எரிசெய்த கோவே நமோ நம
செயசெய அரகர தேவா சுராதிபர் தம்பிரானே”

என்று திரிபுரம் எரிசெய்த சிவப் பரம்பொருளாகவே முருகனைப் போற்றுகிறார். இதன் காரணம் சிவன் வேறு, முருகன் வேறாக அவர் உணரவில்லை .

“நமசிவய” என்ற மந்திரத்தின்பொருளாகவே ரசதகிரிப் பெருமானாகிய கந்தனைக் காண்கிறார். ஆக, திருப்புகழ் கூறும் பரம்பொருள் முருகனும், சைவ சித்தாந்தத்தின் செம்பொருளும் ஒன்றே என்பது

அருணகிரிநாதர் வாக்கு.

"சிவசமய அறுமுகவ திருவேரகத்திலுறை பெருமாளே" என்று சித்தாந்த சைவக் கடவுளாக ஆறுமுகனை வழிபட்ட அருணை முனிவர், சைவ சித்தாந்த நெறியை "நீறிடு சாத்திர நெறி" என்று போற்றுகிறார்.

"தாக்கு அமருக்கு ஒரு சாரையை வேறொரு

சாட்சி அறப் பசியாறியை நீறிடு

சாத்திர வழிக்கு அதிதூ ரனை......"

– (திருப்புகழ் பா. 269)

எனும் பாடலில் நீறிடு சாத்திர நெறி என்பது சைவ சித்தாந்தத்தையே குறிக்கிறது.

முப்பொருள் உண்மை

இன்னும் சொல்லப் போனால், சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கையாக விளங்கும் பதி பசு பாசம் எனும் முப்பொருள் உண்மையே திருப்புகழின் அடிநாதமாக விளங்குகிறது.

முருகப் பெருமானிடம் ஓமென்ற பிரணவ மந்திரத்திற்கு உபதேசம் பெற்ற அருணகிரிநாதர் முப்பொருள் நிலை விளக்கமும் உபதேசிக்க வேண்டுகிறார்.

"ஏதும் சில அறியா ஏழை நான் உன்

பதிபசு பாசம் உபதேசம் பெறவேணும்"

(பாடல் 56) என்றும்,

"கதிபெற ஈடு அறாதன பதி பசு பாசமானவை

கசடற வேறுவேறு செய்து அருள்வாயே"

–(பாடல் 192)

என்றும் குறிப்பிட்டு, உயிராகிய ஆன்மா நற்கதி பெறுவதற்கு முப்பொருள் விளக்கத்தை முருகப் பெருமான் அருளிட வேண்டுகிறார்.

முருகப் பெருமானின் பரத்துவ நிலை (பதித்தன்மை)

முருகனும் சிவனும் ஒன்றே எனக்கருதிய அருணகிரிநாதர், பதித் தன்மைக்குரிய இலக்கணங்கள் அனைத்தும் பொருந்தும் பரம்பொருளாகவே முருகனைப் போற்றுகிறார். மேலும், கந்தரனுபூதியில், "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்பதன் மூலம் பரம்பொருளுக்குரிய பிறப்பு இறப்பற்ற தன்மையையும், "எண் குண பஞ்சரனே" என்ற பதத்தில் எண் குணமுடைய பதித் தன்மையையும் போற்றி மகிழ்கின்றார். முத்தொழில் ஆற்றும் "முகுந்தன், "ருத்திரன், "கா"மன் என்ற மூவர்க்கும் முதல்வனாக விளங்கும் முருகனின் திறத்தைப் பல இடங்களில் பாடி "பதியாகிய கந்தனின் பரத்துவ நிலையைப் பறை சாற்றுகின்றார்.

எடுத்துக்காட்டுக்கு திருப்புகழில் சில வைர வரிகள்:

"அயன் எனவாகி அரி என வாகி

அரன் எனவாகி அவர் மேலாய்

இகரமுமாகி எவைகளுமாகி

இனிமையுமாகி வருவோனே”

– (திருப்புகழ் பா.441)

“படைத்தது அளித்து அழிக்கும் திரிமூர்த்திகளின் தம்பிரானே.”

– (திருப்புகழ் பா.259)

“சிலைமகள் நாயன் கலைமகள் நாயன் திருமகள் நாயன் தொழும் வேலா”

– (திருப்புகழ் பா. 303)

“மூவர்க்கும் ஒரு தம்பிரானே”

– (திருப்புகழ் பா. 910)

மெய் அறிவால் அறியப்படுபவன் இறைவன். அறிவின் முடிபாகிய சைவசித்தாந்தம், இறைவனை பதிஞானமாகிய அறிவாலேயே அறியமுடியுமென்ற உண்மையை விளக்குகிறது.

“பாச ஞானத்தாலும், பசு ஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனை பதிஞானத்தாலே நேசமொடும் உள்ளத்தே நாடி” என்பது சிவஞான சித்தியார் வாக்கு.

இதையே நம் அருணை முனிவரும்,

“அறிவை அறிவது பொருளென அருளிய பெருமானே”

– (திருப்புகழ் பா. 54)

என்றும்,

“அறிவால் அறிந்துன் இருதாள் இறைஞ்சும் அடியால் இடைஞ்சல் களைவோனே”

– (திருப்புகழ் பா.101) என்றும்,

“அருமறைகளே நினைந்து மநு நெறி யிலே நடந்து
அறிவை அறிவாலறிந்து நிறைவாகி”

– (திருப்புகழ் பா. 153)

என்றும், பல இடங்களில் உலகியல் வாழ்க்கையில் பாச அறிவும், பசு அறிவும் நீங்கியபின் மெய்யறிவு ஒன்றினாலேயே இறைவனை அடைய முடியும் என்ற சித்தாந்த உண்மையை விளக்குகிறார். இப்படி சைவ சித்தாந்தத்தின் இறைக் கொள்கைகளையும், இறைவனின் பொது இயல்புகளையும், சிறப்பு இயல்புகளையும் பல பாடல்களில் தான் வழிபடும் சிவப் பரம்பொருளை முருகப் பெருமானின் மேல் பொருத்திப் பாடுகிறார்.

பசு – உயிர்க்கொள்கை

உயிர்களாகிய பசுக்களுக்கெல்லாம் தலைவனாக விளங்குகிறவன் பசுபதியாகிய பரம்பொருள் என்ற சைவசித்தாந்தக் கருத்தை “பசுபதி சிவாக்யம் உணர்வோனே” என்ற பழநிமலைத் திருப்புகழில் காணலாம்.

சைவ சித்தாந்தத்தில் பசுவாகிய உயிரின் இயல்புகளைப் பற்றி கூறும் பொழுது,

உயிர் என்பது

1. தன் விருப்பப்படி எதையும் செய்யும் உரிமையற்றது (தன்னுரிமை இன்மை)

2. அறிவித்தாலன்றி அறியும் நிலை இல்லாதது (முற்றுணர்வின்மை)

3. சார்ந்ததன் வண்ணமாதல் தான் சார்ந்த பொருளில் அழுந்தி அதன் தன்மையை அடையும் நிலை (பதியைச் சார்ந்தால் பதிநிலை, பாசத்தைச் சார்ந்தால் பாசநிலை)

4. முக்குணங்களாகிய சத்துவம், இராசதம், தாமசம் என்ற மூன்று வகை

குணங்களுடையது

5. சாக்கிரம் , சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற ஐந்து அவத்தைகளை உடையது

6. மனம், உடல் முதலிய இயற்கைத் தன்மைகளை உடையது. என்று உயிரின் இயல்பினைக் கூறுவார்கள்.

உயிர் பற்றிய இந்த சித்தாந்தக் கொள்கையை அருணகிரிநாதர் பல பாடல்களில் தெளிவுப்படுத்துகிறார்.

எடுத்துக்காட்டுக்கு:

“நானார் ஒடுங்க நானார் வணங்க
நானார் மகிழ்ந்து உனையோத
நானார் இரங்க நானார் உணங்க
நானார் நடந்து விழ நானார்”

– (திருப்புகழ் பா. 1124)

என்று தன்னுரிமை இல்லா உயிரின் நிலையைப் பாடுகிறார்.

“ஏது புத்தி ஐயா எனக்கினி
யாரை நத்திடுவேன்”

– (திருப்புகழ் பா.255)

என்று உயிரின் சிற்றறிவைப் பாடுகிறார்.

“அந்தோ மனமே நமது ஆக்கையை
நம்பாதே இது அதித சூத்திரம்
அம்போருகன் ஆடிய பூட்டு இது”

என்று உடலின் நிலையாமையை நிலைநாட்டுகிறார்.

ஆக, பசு இயல்புகள் சைவ சித்தாந்தத்தின் மறுபதிப்பாகவே திருப்புகழில் திகழ்கின்றது என்பது தெளிவு.

பாசம்

பாசம் என்பது கயிறு போன்றது. ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மும்மலங்கள் எனப்படும் பாசக்கயிறுகள் பசுவாகிய உயிரினைக் கட்டி, பதியாகிய இறைவனை அடையவிடாமல் தடுக்கின்றன. இது சைவசித்தாந்தம் கூறும் பாசத்தின் இயல்பு. இங்கே, ஆணவம், கன்மம், மாயை என்பவை மும்மலங்கள் என்றால் இவற்றுடன் மாயேயம், திரோதானம் என்பனவற்றையும் சேர்த்து ஐந்தாகக் கூறுவது சைவசித்தாந்தம்.

சைவசித்தாந்தத்திற்கே உரித்தான இந்த ஐந்து மலங்களை அருணகிரிநாதரும் பல தொடர்களில் குறிப்பிடுகின்றார்.

“பஞ்சமாமலம் பாசமுடன் கூடி”
“திரோத மலம் ஆறும் அடியார்கள்
அருமாதவர் தியான முறும்பாதம்
தருவாயே”
– (திருப்புகழ் பா. 89)

ஆணவ மலம்

ஆணவம் உயிரின் அறிவை மறைத்து அறியாமை எனும் மயக்கத்தை ஏற்படுத்தும். ஆணவ மலமாகிய சூரபதுமனை முருகன்சேவலும், மயிலுமாக மாற்றியது போல் ஆணவம் என்ற இருள் இறைவனின் அருள் ஒளி பட்டதும் மறைகின்றது. “நான்” என்கின்ற அகங்காரமும், “எனது” என்கின்ற மமகாரமும், ஆணவத்தின் இரு கூறுகள். இவை இரண்டும் அற்றுப்போகுமாறு முருகனின் அருள் வேண்டிப் பாடும் திருப்புகழ் பாடல்கள் பல. அவற்றுள் சில,

“நானென்பது அற்று உயிரோடு
ஊனென்பது அற்றுவெளி
நாதப் பரப்பிரம்ம ஒளிமீதே
ஞானஞ் சுரப்ப மகிழ் ஆனந்த சித்தியொடெ
நாளுங் களிக்கபதம் அருள்வயே!”
– (திருப்புகழ் பா.238)

“எனதுயானும் வேறாகி எவரும் யாதும்
யானாகும்
இதய பாவனா தீதம் அருள்வாயே”
– (திருப்புகழ் பா. 1284)

இங்கே, ‘‘யானாகிய என்ன விழுங்கி வெறுந் தானாய் நிலை நின்றது தற்பரமே” என்ற கந்தரனுபூதிப் பாடலும் சிந்திப்பதற்குரியது.

கன்ம மலம்

உயிர்களின் இன்ப துன்பங்களை, இறைவன் சஞ்சிதகன்மம், ஆகாமிய கன்மம், பிராரத்த கன்மம் என்ற மூவகைக் கன்மத்தைக் கொண்டு நிர்ணயம் செய்கின்றான் என்பது சைவசித்தாந்தக் கோட்பாடு.

கன்மம் என்பது நல்வினை, தீவினைகளால் வருவது. இவற்றை இருவினை என்று அருளாளர்கள் குறிப்பிடுவர்.

அருணகிரிநாதர் இருவினை பற்றிக் கூறும் பொழுது,

“இருவினை புனைந்து ஞான
விழிமுனை திறந்து நோயின்
இருவினை இடைந்து போக மலமூட”
– (திருப்புகழ் பா.235)

என்றும்

உலக வாழ்க்கையில் இந்த இரு வினைகளை ஈட்டுகின்ற கூடாக இந்த உடல் அமைகிறது என்பதை,

“இருவினைகள் ஈட்டும் இழவு படு
கூட்டை
எடும் எடும் என வீட்டில் அனைவோரும்
இறுதி இடு காட்டில் அழுது
தலைமாட்டில்
உரிய எரிமூட்டி இடுமாறு”
– (திருப்புகழ் பா 1201)

என்றும் பல பாடல்களில் அழகுபெறக் கூறுவார்.

இந்த இருவினைகளால் வரும் இன்ப துன்பத்தைப் பொருட்படுத்தாது விருப்பு

வெறுப்பின்றி வாழ்வதை ‘இருவினை ஒப்பு’ என்று சித்தாந்தம் கூறும். இருவினை ஒப்பு உடையவர் மலநீக்கம் என்று அழைக்கப்படும் மலபரிபாகம் பெறுவர். மலநீக்கம் அடைந்தவர் .இறைவனின் திருவருளாம் முக்தியை அடைவர்.

இதன் காரணமாகவே, இருவினை வென்று, மலநீக்கம் பெறுவதற்கு முருகப் பெருமானின் திருவருளை வேண்டுகிறார் அருணகிரிநாதர். இதையே, பின்வருமாறு பாடுகிறார்;

“இருவினை அஞ்ச மலவகை மங்க
இருள்பிணி மங்க மயிலேறி
இனவருள் அன்பு மொழிய கடம்பு
வினதகமுங்கொடு அளிபாட”

– (திருப்புகழ் பா 517)

மாயா மலம்

பிரபஞ்சத்திற்கு மற்றொரு பெயர் மாயை. இம்மாயை சுத்தமாயை, அசுத்தமாயை என்று இருவகைப்படும்.

அசுத்த மாயையின் நான்கு நிலைகளை தனு, கரணம், புவனம், போகம் என்று குறிப்பிடுவர். இதில் தனு எனப்படும் அசுத்த மாயையில் ஒரு பகுதி தத்துவங்கள் என்றழைக்கப் பெறும். ஐம்பூதங்கள், ஐம்புலன்கள் அவை உணரும் ஐவகை உணர்வுகளைத் தத்துவ நிலைகளாக்கி அவை 36 என்று குறிப்பிட்டு, இந்த 36 தத்துவங்களின் அடிப்படையில் உலகம் இயங்குகிறது என்பது சித்தாந்த விளக்கம். இந்த 36 தத்துவங்களின் வளர்ச்சியாக 96 தத்துவங்களையும் சைவ சித்தாந்தம் குறிக்கின்றது.

“ஆறும் ஆறும் அஞ்சும் அஞ்சும்
ஆறும் ஆறும் அஞ்சும் அஞ்சும்
ஆறும் ஆறும் அஞ்சும் அஞ்சும்
ஆறுமாய சஞ்சலங்கள்”

– (திருப்புகழ் பா 745)

என்று கூறியவர் அந்த 96 தத்துவங்களையும் கடக்க அருள்புரிவாயே என்று பல பாடல்களில் முருகனிடம் நமக்காக வேண்டுகிறார்.

மனிதனைப் பிறவிக் கடலில் மூழ்கச் செய்வது மாயை. இதற்கு உவமையாக, பல திருப்புகழ் பாடல்களில் காமக்கடலில் மூழ்கச் செய்யும் விலை மகளிரின் செயல்களைக் கூறி மாயையின் தன்மையை நமக்குப் புரிய வைக்கிறார் அருண்கிரிநாதர்.

நிறைவுரை

தொன்மைமிகு சைவ சித்தாந்த மாமருந்தைத் தான் வாழ்ந்த காலத்திற்கும், அதன் சூழலுக்கும் ஏற்ப எளியவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் திருப்புகழ் எனும் தேனில் குழைத்துக் கொடுத்தவர் அருணகிரிநாதர். அதைப் பக்தியெனும் பாலோடு கொடுத்தார்.

“சிவசமய அறுமுகவ திருவேரகத்துறை பெருமாளே” என்று பரம்பொருளை முருகவேளின் வடிவில் கண்டு அருள்

பெற்ற அருணை முனிவர், சைவ சித்தாந்தத்தை சிவ கலைகள் என்றே போற்றுகிறார். சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கையான பதி பசு பாசம் என்ற முப்பொருள் நிலை திருப்புகழின் சாரமாகவே விளங்குகின்றது என்பது தெளிவு.

அவர் காலத்தில் சற்று தொய்வாக இருந்த சைவத்தை தூக்கி நிறுத்தி, அதே சமயம், அறுசமய நல்லிணக்கத்தையும், ஒருமைப்பாட்டையும் முருக பக்தியின் மூலமாக நிலை நாட்டிய பெருமையும் அருணகிரிநாதரையே சாரும்.

அவர் அருளிய திருப்புகழ் எனும் கடலில் கொட்டிக் கிடக்கின்ற சித்தாந்த முத்துக்களை மூழ்கி எடுத்து, அவர் பெற்ற இன்பத்தை அனைவரும் பெறுவோம்.

“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்’’

(குறிப்பு : இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ள பாடல் எண்கள் சகுந்தலை நிலையம் (முதல் பதிப்பு 2002) வெளி யிட்ட திருப்புகழ் பதிப்பில் உள்ள எண் வரிசையாகும்)

திருமந்திரம்

அறியாப் பருவத் தரனடி யாரைக்
குறியால் அறிந்தின்பங் கொண்ட தடிமை
குறியார் சடைமுடி கட்டி நடப்பார்
மறியார் புனல்மூழ்க மாதவ 2மாமே.

விளக்கம்:

இளம்பருவத்து அரனடியவர்களை அவர்கள் மேற்கொண்டுள்ள சிவத்திருக்கோலப் பொலிவால் சிவன் அடிமை கொண்டருள்கின்றனன். அந் நிலையிலும் ஒரு பேரின்பம் அளித்தருள்கின்றனன். கொன்றைச் சடையான் திருவடியை மறவா நினைவினர் என்பதன் புற அடையாளமே பின்னிய திருச்சடையுடையராய் ஒழுகுவர். அவர்தம் திருவடியினை விளக்கிய திருத்த நீரை அலைசேர் அரும்புனலாக மூழ்க, அதுவே இறப்பில் தவமாம்.

****

அவன்பால் அணுகியே அன்புசெய் வார்கள்
சிவன்பால் அணுகுதல் செய்யவும் வல்லன்
அவன்பால் அணுகியே நாடு மடியார்
இவன்பாற் பெருமை இலயம தாமே.

விளக்கம்:

மேல் ஓதிய சிவனடியாரை அடைந்து, அவர்க்கு அன்பும் பணியும் இன்புறச் செய்வார், சிவபெருமான் திருவடியை நெருங்கவும் வல்லராவர். மேலும், அம் மெய்யடியாரைத் தொடர்ந்து நாடுபவர் சிறந்தோராவர். அவர்பால் முழுப்பெருமையும் தங்கும். சிவனடியார் வா யிலாகவே தாயிலாச் சிவனை ஏய்தலாம்.

கோவிலூர் ஆதீன வெளியீடுகள் கோவிலூர் புதையல்கள் – 8

பழனியப்ப ஐயா அவர்கள் இயற்றிய

பழனிமலை செட்டியார் மாலை – அறிமுகம்



உ
சிவமயம்.
பாண்டிநாட்டிலுள்ள
கோயிலூர் மடாலயத்தின்
சிஷ்யராகிய
சொர்னநாதபுரம்
பழனியப்ப ஐயா அவர்கள்
இயற்றிய
பாடற்றிரட்டு.
இஃது
ஷை மடாலய சிஷ்யராகிய
ஒய்யக்கொண்டான் சிறுவயல்,
முரு. அள -
சுப்பிரமணியஞ் செட்டியாரவர்களால்
தஞ்சாவூர், சதாவதானம்,
சுப்பிரமணிய ஐயரவர்கள்
முன்னிலையில்
பரிசோதிக்கப்பட்டு,
சென்னை:
மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1898-ஆ

இந்த நூலை முழுமையாகத் தரவிறக்கம் செய்ய இந்த லிங்கை கிளிக் செய்யவும்

- நூல் அறிமுகம்

- கு. அன்பு மெய்யப்பன்,
உதவிப் பேராசிரியர்,
இராமசாமி தமிழ்க் கல்லூரி,
காரைக்குடி - 3.

நகரத்தார்களுக்கும் முருகப் பெருமானுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. வேல் வழிபாடு இன்றுவரை தொடர்வதை நாம் அறிவோம். முருகனை, செட்டி முருகன் என்றும் அழைப்பதுண்டு, "செட்டி" என்னும் சொல் முருகனுக்கான பெயர்களில் ஒன்று என்று சூடாமணி நிகண்டு சுட்டுகிறது. "செட்டி யெனுமோர்திரு நாமக்கார" என்று திருப்புகழின் 1026ஆவது பாடல் சுட்டுகிறது. செட்டி முருகன் என்றும் கூட முருகனை அழைப்பர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள செட்டிகுளம் என்னும் இடத்தில் உள்ள அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் வடபழனி என்றழைக்கும் பெருமையை உடையது. இங்குள்ள முருகன் செட்டி குளம் முருகன்

என்றழைக்கப் பெறுகிறான். இங்கிருக்கும் முருகனுக்குச் செட்டி குளம் முருகன் என்று பெயர் ஏற்பட்டதற்குப் புராணக் கதை ஒன்று இன்றும் விளங்கி வருகிறது. அகத்தியர் இத்தலத்தில் முருகனை எண்ணி தவம் இருந்து வந்தார். அப்போது, வளையல் விற்கும் செட்டி வணிகர் போல் அகத்தியருக்கு முருகப் பெருமான் காட்சி தந்து அருள்கிறார். இதன் காரணாக இந்த முருகனுக்குச் செட்டி முருகன் என்ற பெயர் வழங்கி வருகிறது. இவர் இருக்கும் இடம் செட்டி குளம் எனப்பட்டது, இவ்வூருக்கு வட பழநிமலை என்று பெயர் இருந்தாலும், செட்டிகுளம் என்றே இன்றளவும் அழைக்கப்படுகிறது.

இவ்வாறு முருகனுக்கும் வணிகரான நகரத்தார்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. நகரத்தார்களுக்கும் பழனி மலைக்கும் உப்பு வணிகம் தொடங்கிப்பழனிபாதயாத்திரை,காவடி என்று தலைமுறை தலைமுறையாகத் தொடர்பு உண்டு. நகரத்தார்கள் பலரும் பழனித் திருத்தலம் பற்றிய அருட்பாடல்களைப் பாடி வந்துள்ளனர். பாடியும் வருகின்றனர். கோவிலூர் மடத்தின் சீடராக விளங்கிய சொர்ணநாதபுரம் பழனியப்ப ஐயா என்பவரும் பல பாடல்களைப் பழனி தண்டாயுதபாணியின் மீது பாடிப் பரவியுள்ளார். இவை ”பழனிமலைச் செட்டியார் மாலை” என்று தொகுக்கப் பெற்று வெளியிடப்பெற்றுள்ளது. இந்நூல் மொத்தம் 205 பாடல்களைக் கொண்டுள்ளது. முதல் ஐந்து பாடல்கள் காப்புப் பாடல்களாக அமைந்துள்ளன. இந்நூலில் உள்ள பாடல்கள் அனைத்திலும் பழனிச் செட்டி என்றே பழனிமலை முருகனை விளித்துப் பாடல்கள் இயற்றியுள்ளார். பழனிச் செட்டி என்ற தொடர் இல்லாத பாடலடி இல்லை என்ற அளவில் பழனிமலைச் செட்டியைக் கொண்டாடுகிறார் பழனியப்ப ஐயா.

இவரிது பாடல்களின் அடிநாதம் முருகனிடம் அறம் செய்யப் பொருள் வேண்டுதலே ஆகும். கடவுள் முருகனை தன் நெருங்கிய நண்பரைப் போன்று, நெருங்கிய உறவினரைப் போன்று கருதிப் பேசுகிறார்.

“சொந்தமாச்சே நீர்தாமுஞ் செட்டியாரே யெனைத்

தூரமென வெண்ணாதீர் செட்டியாரே”

“...சேட்டனுக்குப் பெண்ணில்லையே செட்டியாரே யுமக்குத்

தேவியிரண்டென்னத்துக்கு செட்டியாரே”

சேட்டன் என்றால் மூத்தவன் என்று பொருள். முருகனின் மூத்தவன் விநாயகர். ஆகவே விநாயகருக்கு மனைவி இல்லை என்று கேலியாகச் சுட்டி இருக்கிறார்.

“பிறத்தியானல்லகாண் செட்டியாரே சொந்தப்

பிள்ளைதானான் பழனிச் செட்டியாரே”

என்று என்னை வேற்று ஆளாகக் கருதாதே நான் உன் பிள்ளை என்கிறார். மற்றொரு பாடலில்,

காதுபனிரண்டிருக்கச் செட்டியாரே நானுங்

கத்துவதுகேட்கலையோ செட்டியாரே”

என்று நகைச்சுவைபடப் பாடியுள்ளார்.

முருகப் பெருமானிடம் மிகச்

சாதாரணமாக, நீ அறம் செய்ய எனக்குப் பொருள் தந்தால் நன்றாக இருப்பாய் எனக் கூறுவது முருகன் மீதான அவரது அதிகமான அன்பை வெளிக்காட்டுகிறது.

"மகராசராயிருப்பீர் செட்டியாரே மனையாள்
மங்கிலியமிகத்தழைக்குஞ் செட்டியாரே
சகசொருபமாயிருப்பீர் செட்டியாரே நான்
சொன்னாற்போற்கேளுங்காணுஞ் செட்டியாரே
மிகவுநானேழையையா செட்டியாரே யெனக்கு
மிக்கநிதிதாருமையா செட்டியாரே"

என்கிறார்.

முருகன் மீதான அளவுகடந்த பற்று

முருகனை நம்பியபின் சகுனம் பார்ப்பதை விட்டுவிட்டேன் என்று முருகன் மீதான தனது நம்பிக்கையை கீழ்வரும் வரிகளில் புலப்படுகிறார்.

"வழிச்சகுனம்பார்ப்பதுவுஞ் செட்டியாரே கெவுளி
வாசகத்தைக்கேட்பதுவுஞ் செட்டியாரே
யொழித்தேனொழித்தேனையா செட்டியாரே யும்மை
யுண்மையாய் நம்பினபின் செட்டியாரே"

முருகனிடம் வேண்டுவது

ஒவ்வொரு பாடலின் முடிவிலும் தனக்கு நிதி தரவேண்டும் என்று முருகப் பெருமானை வேண்டுகிறார் பழனியப்பையா. ஓரிடத்தில்,

"ஞானங்கேட்கும்வாயினாற் செட்டியாரே யும்மை
நானுநிதிகேட்டேனென்றே செட்டியாரே
ஈனமுரைத் தாலென்செய்வேன் செட்டியாரே
இருங்கழனிமாதவத்தோர் செட்டியாரே
தானத்துக்காவென்றுசொல்லிச் செட்டியாரே யவரைச்
சரணமிகச்செய்கிறேனான் செட்டியாரே
வானத்தவர்பணியுஞ் செட்டியாரே நிதி
வழக்குநடனீபழனி செட்டியாரே "

என்று பாடுகிறார். முருகனிடம் ஞானத்தைக் கேட்க வேண்டும். ஆயினும் நான், நிதியினைக் கேட்கிறேன். கோயிலூரில் இருக்கின்ற மாதவத்தோரின் தானத்துக்காக என்று கூறுகிறார்.

மற்றொரு பாடலில்,

"அன்னம்பலர்க்கிடவுஞ் செட்டியாரே கனகம்
அந்தணர்கட்கீய்ந்திடவுஞ் செட்டியாரே
மன்னுந்தவத்தினர்க்குச் செட்டியாரே யன்னம்
வளமாயளித்திடவுஞ் செட்டியாரே
இன்னலனைத்துநீக்கிச் செட்டியாரே நானும்
இல்லத்திலிருந்துணவுஞ் செட்டியாரே
பொன்னெனக்குத்தாருமையா செட்டியாரே
....."

என்று நிறைய நிதியும் , தங்கமும் தர வேண்டுகிறார். பலருக்கும்அன்னதானம் செய்யவும், அந்தணர்க்குத் தங்கம் அளிக்கவும், தன் இல்லத்திலிருந்து அனைவரும் உணவு உண்ண இவற்றைத் தருமாறு வேண்டுகிறார். மேலும்,

"மெத்தப்பசித்தவர்க்குச் செட்டியாரே யன்னம்

விரைவிலிடவேண்டுமன்றிச் செட்டியாரே"

என்றும் பாடுகிறார்.

இலங்கை பற்றி ஐயாவின் பார்வை

"கொழும்புக்குப்போகவென்றாற் செட்டியாரே யது

கோக்கொலைபுரியுந்தேசஞ் செட்டியாரே

அழும்பான்மிகுந்ததேசஞ் செட்டியாரே சைவ

ஆசாரமற்றதேசஞ் செட்டியாரே"

என்று நூறாண்டுகளுக்கு முன்பாக இருந்த இலங்கை நிலை பற்றிப் பாடுகிறார் பழனியப்ப ஐயா.

கோயிலூர் மடாதிபதிகள் பற்றிய செய்திகள்

இப்பாடல்களில், ஆண்டவர், துறவாண்டவர், கருணாநிதி சுவாமிகள் பற்றிய செய்திகளும் இவர் இயற்றியுள்ள இந்த வாடாத மாலையில் இடம்பெறுகின்றன.

ஆண்டவர் என்ற முத்துராமலிங்க ஞானதேசிகர்

இவர் ஆண்டவரை முருகப் பெருமானாகவே பாவித்துப் பாடியுள்ளார். "கழனிமுத்துராமரான செட்டியாரே" என்று ஆண்டவரை அழைக்கிறார். மற்றொரு இடத்தில், "குருவினுக்குக்குருவாகுங் கழனி முத்துராமரைப்போற் கோலங் கொண்டே"..

என்று பாடுகிறார்.

துறவாண்டவர் என்ற அருணாச்சல ஞான தேசிகர்

"...............முற்றும்

வெறுத்ததுறவுச்சாமி செட்டியாரே

எம்மிறைபூசைக்குதவச் செட்டியாரே நிதி

ஈயுநடனீபழனிச் செட்டியாரே"

என்ற பாடலில் துறவாண்டவர் பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது.

"அருணாசலகுருவைச் செட்டியாரே நானும்

அடைந்தநாள்முதலாகச் செட்டியாரே

ஒருகுறைவுமில்லைகாணுஞ் செட்டியாரே யவர்

உமதுவடிவமல்லோ செட்டியாரே"

என்று இவர் துறவாண்டவர் பற்றிப் பாடுகிறார்.

கருணாநிதி சுவாமிகள் என்ற சிதம்பர ஞான தேசிகர்

பழனியப்பையா இப்பாடல்களை எழுதிய காலத்தில் மடாதிபதியாக இருந்தவர்கள் துறவாண்டவர். மூன்றாம் பட்டமாக வர இருந்தவர்கள் சிதம்பர ஞானதேசிக சுவாமிகள். ஆனால். அவர்கள் அப்போது மடத்தில் இருந்ததால், அவரை ஐயா என்று அழைத்திருக்கிறார்கள். அதனை,

"அடுத்தவனைக்கெடுக்கலாமோ செட்டியாரே சிதம்ப

அய்யாவண்டை சொல்லவாருஞ் செட்டியாரே"

என்றும், "புண்ணியர் சிதம்பரையா, கழனி உத்தமச் சிதம்பரையா, சிதம்பரத்தையா" என்று பல இடங்களில் மூன்றாம் பட்டத்து சுவாமிகளாக வர இருப்பவரைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு கோவிலூரின் மூவர் பெருமக்களைப் பழனியப்ப ஐயா போற்றிப் பாடியுள்ளார். கோவிலூர் மடத்தின் சீடர் இவர் என்பதற்கு

இன்னும் ஏதும் சான்று வேண்டுமோ?

தாயான முருகன்

குருவாகப் பாடியவர் தாயாகும் தன்மை பெற்றவர் முருகன் என்றும் பாடுகிறார் பழனியப்ப ஐயா.

“வயிறுபசித்ததென்றாற் செட்டியாரே குழவி
மாதாவின்பாற்சொல்லுமன்றிச் செட்டியாரே
அயலாரிடத்திற்போமோ செட்டியாரே நானும்
அதுபோலும்மைநாடிவந்தேன் செட்டியாரே
பயமகலச்செய்யுமையா செட்டியாரே மிகவும்
பாக்கியந்தந்தாளுமையா செட்டியாரே”

என்று பாடுகிறார். பழனியப்பையாவின் பாடல்களில் இருக்கும் வெளிப்படைத்தன்மை நம்மை வியக்கவைக்கிறது. இவர் இன்னும் பல பாடல்களைச் சிற்றிலக்கியங்களை எழுதியுள்ளார். அவற்றைப் படிக்கப் படிக்க பக்தியும் ஞானமும் அருட்பயனும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

திருநெல்லை இதழுக்கான ஆன்மிகப் படைப்புகள் வரவேற்கப்படுகிறன. திருநெல்லை (இணைய இதழ்), கோவிலூர் மடாலயம், கோவிலூர் என்ற முகவரிக்கு அஞ்சலிலோ அல்லது நேரிலோ தங்கள் ஆக்கங்களை அன்பர்கள் அளிக்கலாம்.

திருமந்திரம்

முன்னிருந் தார்முழு தெண்கணத் தேவர்கள்
எண்ணிறந் தன்பால் வருவர் இருநிலத்
தெண்ணிரு நாலு திசையந் தரமொக்கப்
பன்னிரு காதம் பதஞ்செய்யும் பாரே.

விளக்கம்:

முதன்மையாக ஒண்மையுடன் இருந்த சிவனடியாரைப் பதினெண்கணத்தவர் உள்ளிட்ட தேவர்கள் அனைவரும் கைகூப்பித் தொழுவர். அவர்களே இந் நிலவுலகத்து வந்து சிறப்புடன் பூசையாற்றுவர். அவ் வழிபாடு தெளிந்த எட்டுத் திசையிலும் சேர்ந்து வழிபட, அவ் வழிபாட்டின் பயனாகப் பன்னிருகாத எல்லை சிவமணம் கமழும். அஃதாவது திருவெண்ணீறு, சிவமணி, திருவைந்தெழுத்துப் பயிலுவதால் அக்குறி சிவமாந்தலைவன் அருட்குறியாகிய வாய்மைக் குறியாகும்.

****

சிவயோகி ஞானி செறிந்தஅத் தேசம்
அவயோகம் இன்றி அறிவோருண் டாகும்
நவயோகங் கைகூடு நல்லியல் காணும்
பவயோகம் இன்றிப் பரலோக மாமே.

விளக்கம்:

சிவன் திருவடியை மறவா நினைவுடையோன் சிவயோகியாவன். சிவனிறைவில் அழுந்தித் தற்செயலற்றுச் செய்வனவெல்லாம் சிவன் செயலாப் புரிபவன் சிவஞானியாவன். அத்தகையோர் வாழும் நாடு சிவநாடு ஆகும். அந் நாட்டில் மெய்யுணர்வுடையோர் வாழ்வர். அங்குக் கேட்டைத் தரும் தீவினைகள் ஏதும் நிகழா. ஆண்டு அருளால் எய்தும் புதுமை யுண்டாகும். மேலும் எவ்வகையான நன்மையும் பெருகும். ஆண்டு வாழ்வோர் மீண்டும் பிறவார்; சிவவுலகம் உறுவர்,

காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி பாடல் நலம்

எனக்கு அரியது உண்டா

- வாகீச கலாநிதி
கி.வா. ஜகந்நாதன்

இனிய பொருள் எது? இந்தக் கேள்விக்கு எல்லோரும் ஒரே வகையான விடையைத் தரமாட்டார்கள். சின்னக் குழந்தையைக் கேட்டால், "தித்திப்பான பண்டம் இனியது" என்று சொல்லும். புதிதாகத் திருமணம் செய்து கொண்ட ஒரு கட்டிளங் காளையிடம் இந்தக் கேள்வியைக் கேட்டால், "என் காதலிதான் எல்லாவற்றிலும் இனிய பொருள்" என்று சொல்வான். இசையிலே விருப்பம் உடையவர்களை அணுகி இந்த வினாவைக் கேட்டால், "இசைதான் இனியது" என்பார்கள்.

இந்த இனிமை யாவும் நம்முடைய பொறிகளுக்கு இன்பம் தருபவை. செவிக்கு இனிய இசையும் நாவுக்கு இனிய உணவும் கண்ணுக்கினிய காட்சியும் நாசிக்கினிய நறுமணமும் உடம்புக்கு இனிய மெத்தையும் இனிமையான பொருள்கள் என்றே மக்கள் உணர்கிறார்கள். ஆனால் அந்த இனிமையைப் பொறிகள் வாயிலாக நுகர்கிறார்கள்.

பொறிகளின் வாயிலாக அந்த இனிமைப் பொருள்களால் உண்டாகும் இன்பம், மனத்தைச் சார்கிறது. உண்மையில் மனந்தான் இன்பம், துன்பம் என்னும் அநுபவங்களைப் பெறுகிறது; ஐம்பொறிகளின் வாயிலாக அவற்றை அடைகிறது. மனத்தின் தொடர்பு இல்லாவிட்டால் பொறிகள் இன்ப துன்பத்தை நுகர முடியா. மயக்க மருந்து கொடுத்தபிறகு அறுவை மருத்துவம் செய்கிறார்கள். அப்போது துன்பம்தெரிவதில்லை. அறுக்கும் உடம்பில் உயிர் இருக்கிறது

என்றாலும் மனத்தோடு உள்ள தொடர்பு அப்போதைக்கு இல்லை; அதனால் அறுவைச் சிகிச்சைக்கு உள்ளாகும் மனிதன் அந்தத் துன்பத்தை அப்போது உணர்வதில்லை.

ஒரு குமரன் அயர்ந்து தூங்குகிறான். அவனருகில் ஒருவன் இனிமையாகப் பாடுகிறான். அந்தப் பாட்டை அவன் கேட்பதில்லை. செவிகள் திறந்திருந்தாலும், தூக்க நிலையில் அவற்றோடு மனம் தொடர்பு பெறாதமையால் அவன் கேட்ப தில்லை. ஒரு நண்பன் அவனை அணைக்கிறான். அதையும் அவன் உணர்வதில்லை.

ஆகவே இன்பம், துன்பம் என்ற இரண்டும் மனத்தினால் நுகரப்படும் நுகர்ச்சிகள் என்பது தெளிவாகும். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து வகையான நுகர்ச்சிகளையும் ஐம்பொறி வாயிலாக உணர்ந்த மனம் இன்பத்தையோ, துன்பத்தையோ அடைகிறது. அவ்வாறு உண்டாகும் இன்பத்துக்குக் காரணமாக உள்ள, பொறிகளின் வாயிலாக இன்பத்தைப் புகுத்துகிற பொருள்களே இனிய பொருள்கள் என்று சொல்கிறோம்.

சில சமயங்களில் என்றோ நிகழ்ந்த நிகழ்ச்சியை நினைத்து இன்புறுகிறோம். அப்போது அந்த இன்பத்துக்குக் காரணமாக இருப்பது பழைய அநுபவத்தின் நினைவு. அந்த நினைப்பை நினைக்கும்போது பொறிகளின் உதவி வேண்டி யிருப்பதில்லை. மனம் தன்னுள்ளே புதைந்து கிடந்த அநுபவத்தை வெளிக் கொணர்ந்து சுவைக்கிறது. இலக்கிய இன்பம் நினைவினால், எண்ணத்தால், சிந்தனையால் உண்டாவது. இலக்கியத்தில் வரும் காட்சிகளை நாம் நேரில் பார்க்காவிட்டாலும் கற்பனை செய்து இன்பம் காணுகிறோம். அப்போது அந்தக் கற்பனைக்கு இந்தப் பொறிகள் துணையாக இருப்பதில்லை. பலகாலமாக அநுபவித்த அநுபவங்களின் உறைப்பினாலே மனமே ஒரு கண்ணைப் படைத்துக்கொண்டு அகத்திலே ஒரு காட்சியைக் கண்டுகளிக்கிறது; செவியைப் படைத்துக் கொண்டு இசையைக்கேட்டுக் களிக்கிறது. இந்தக் கற்பனைப் பொறிகளைத் தெளிவாகக் கனவிலே காணமுடிகிறது. கனவில் வரும் இன்ப துன்பங்கள் கற்பனையால் அமைந்த பொறிகளின் வாயிலாகத் தோன்றுகின்றன. மலரை மோந்து பார்ப்பது போலவும், திருடனுக்கு அஞ்சி ஓடுவது போலவும், ஒரு மலையைக் காண்பது போலவும் கனவிலே காண்கிறோம். அப்போது கண், கால் முதலிய உறுப்புக்கள் இருப்பதாகவே தோன்றுகிறது. அவ்வளவும் மனத்தின் கற்பனையே.

இந்த நிலையில் நுகரும் ஒன்றைத்தான் சூட்சும சரீரம் என்றும் நுண்ணுடல் என்றும் சொல்வார்கள். கனவிலே இன்ப துன்பங்களை நுகர்வது இந்த நுண்ணுடலே. பரு உடம்பை விட்டு இன்ப துன்பங்கள் உண்டு; சொர்க்கம் என்றும் நரகம் என்றும் கூறும் இன்பதுன்ப நுகர்ச்சிகளை அடைவது இந்தச் சூட்சும சரீரமே.

ஆகவே நாம் இன்பதுன்பம் என்று சொல்கிறவை பரு உடலோ, நுண்ணுடலோ ஏதேனும் ஒன்றின் வா

யிலாகவே அநுபவிக்கப்படும். இந்த உடல்கள் அழிபவை. ஒரே மாதிரி இருப்பவை அல்ல. பொறிகளும் எப்போதும் ஒரே நிலையில் இருப்பவை அல்ல.

நோய் வந்தவனுக்கு நாக்குச் சுவையை உணர்வதில்லை. முதுமையை உடையவர்களுக்கு இந்திரியங்கள் வலிமையை இழந்து விடுகின்றன. இளமையில் அவர்கள் பெற்ற இன்பத்தை இப்போது நுகரமுடிவதில்லை. முன்பு இன்பமாக இருந்த சில இப்போது துன்பமாக இருக்கின்றன.

இப்படி அநுபவிக்கிற அநுபவங்கள் இன்பம், துன்பம் என்று இரண்டு வகையாக இருக்கின்றன. இரண்டும் கலந்தே வரும். ஒளியும் நிழலும் அடுத்தடுத்தே இருப்பதுபோல இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். இன்பத்துக்கு இனம் துன்பம். தனித் துன்பமே நுகர்வாரும் இல்லை; தனி இன்பமே நுகர்வாரும் இல்லை. ஆனால் வேறு ஒருவகை இன்பம் இருக்கிறது. அது துன்பம் என்ற இனமே இல்லாதது. குத்துவிளக்கை வைத்தால் ஒளியும், அந்த விளக்கின் நிழலும் தெரிகின்றன. கதிரவனிடம் ஒளியேயன்றி நிழல் ஏது? மரங்கள் முதலியவற்றின் நிழல்கள் இருக்கின்றனவே என்றால், அந்த ஒளியைத் தடுக்கும் பொருள்களின் நிழல்கள் அவையேயன்றிக் கதிரவனுடைய நிழல் அன்று அது. அதுபோல மனத்தால் அறியப்படும் இன்பத்துக்கு நிழல் போலத் துன்பம் இருந்தாலும், துன்பம் என்னும் நிழலே தோன்றாத இன்பம் ஒன்று உண்டு. அது நாம் நுகரும் சுக துக்கங்களுக்கு அப்பாற்பட்டது. அதைத்தான் சிவானந்தம், பிரம்மானந்தம், பரமானந்தம் என்றெல்லாம் பெரியவர்கள் சொல்வார்கள். அது உயிரினால் அநுபவிப்பதற்குரியது. இன்பம் துன்பம் என்பவை மனம் உள்ள எல்லைக்குள் அநுபவிப்பவை. அந்த எல்லையைக் கடந்துவிட்டால் இன்பமே அன்றித் துன்பம் இல்லை. அந்த எல்லையற்ற இன்பமே சீவன் முக்தர்கள் பெறும் இன்பம்.

அந்த இன்பம் புலனுகர்ச்சியாகிய இன்ப வகைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது; என்றும் மாறாதது. "வந்த பேரின்ப வெள்ளத்தில் திளைத்து மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் பெற்ற இந்தப் பேரின்பத்தைச் சேக்கிழார் சொல்வார்.

"கனியி னும்கட்டி பட்ட கரும்பினும்
பனிம லர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமு டிகவித் தாளும் அரசினும்
இனியன் தன் அடைந் தார்க்கிடை மருதனே"

என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார். இந்தப் பாட்டில் முதலில் சொன்ன இனிய பொருள்கள் அத்தனையும் பொறிவாயிலாக நுகரப்படும் இன்பங்கள். மனத்தின் எல்லைக்குள் அகப்படாத இடைமருதனே பொறிகளும் மனமும் கடந்த நிலையில் நுகரப்படும் ஆனந்தமயப்பொருள். அப்படி உயிரில் இனிப்பவன் எம்பெருமான் என்பதை நன்கு உணர்ந்து அவனை நினைந்து, நினைந்து ஈடுபடுவது

அன்பர்களின் செயல். அவர்கள் தம் கருவி கரணங்களையெல்லாம் அவனிடத்தில் ஈடுபடுத்துவார்கள். அவன் திருவுருவத்தைக் கண்டும், அவன் புகழைக் கேட்டும், அவன் பிரசாதத்தை உண்டும், அவனை அருச்சித்த மலரை மோந்தும், அவன் திருக்கோயிற் காற்றை நுகர்ந்தும், இன்புறுவார்கள். அவன் கோயிலைக் காலால் வலம் வந்து மகிழ்வார்கள். அவனைக் கையால் தொழுது உவகை அடைவார்கள். மனத்தால் அவனைத் தியானித்து அமைதியும் இன்பமும் அடைவார்கள்.

இத்தகைய நிலைகளையெல்லாம் அநுபவத்தில் உணர்ந்த காரைக்கால் அம்மையார் தம் அநுபவத்தைப் பாடுகிறார்.

“எனக்குத் தலைவனாகிய பரமசிவன் எனக்கு இனியன்: என் உயிருக்கு இனியன். எனக்கு மட்டுமா? எல்லா உயிருக்கும் இனிய சர்வேசுவரன்” என்று தொடங்குகிறார்.

“எனக்கு இனிய எம்மானை ஈசனை”

எதைஎதையோநினைத்துக்கவலையை அடைவது மனிதர்களின் இயல்பு. கண்ட கண்ட பொருள்களையெல்லாம் தன் கையிலுள்ள அழுக்குப் பாத்திரங்களில் போட்டுவைத்துக் கொள்ளும் பைத்தியக்காரனைப் போல நாம் இருக்கிறோம். நம் மனம் அழுக்குக் கூடையாக, குப்பைத் தொட்டியாக இருக்கிறது. அதைக் கிளறக் கிளறக் குப்பையே வருகிறது.

பெரியவர்கள் உள்ளம் அப்படி இராது. தாம் பயன் படுத்தும் அறையை அடிக்கடி தூய்மைப்படுத்து வதைப் போல, அவர்கள் அடிக்கடி மனத்தை அப்பியாசத்தால் தூய்மைப்படுத்திக் கொள்வார்கள்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொருளில் அழுத்தமான ஆசை இருக்கும். அவர்கள் வெவ்வேறு பொருள்களைப்பற்றிஎண்ணமிட்டாலும், ஆசைப்படும் அந்தப் பொருள் அடிக்கடிவந்து தலைகாட்டும். ஏதாவது இன்பத்தைப் புதிதாக நுகர்ந்தவன், பல பல எண்ணங்களுக்கிடையிலும் அந்த இன்பத்தையே நினைத்துக் கொண்டிருப்பான். தன் குழந்தையை இழந்த தாய் வெவ்வேறு எண்ணங்களில் ஈடுபட்டாலும் அடுத்தடுத்துக் குழந்தையை இழந்த எண்ணமே தலைதூக்கி நிற்கும். இறைவனிடம் ஈடுபட்ட அன்பர்கள் எதை எண்ணினாலும் இறைவனுடைய நினைப்பே மீதூர்ந்து நிலை பெற்றிருக்கும். ஒரு வீட்டுக்கு வருவார் போவார் பலர் இருந்தாலும் அங்கே வசிப்பவர்களே என்றும் தங்கி யிருப்பார்கள். அதுபோல வெவ்வேறு நினைவுகள் மனத்திலே வந்து போனாலும் எதில் அதிக ஈடுபாடு இருக்கிறதோ அந்த எண்ணம் அடிக்கடி வரும்; மனத்தை விட்டுப் போகாது.

இறைவனிடம் முறுகிய அன்புடைய உள்ளத்தில் அவன் நினைவு நிலையாக இருக்கும். மனமென்னும் பெட்டியில் அந்த நினைவு என்றும் நீங்காத செல்வமாக, வைப்பாக இருக்கும். எத்தகைய இடையூறு வந்தாலும், எதை மறந்தாலும் இறைவனை அவர்கள் மறக்கமாட்டார்கள். அவனையே உள்ளத்திலே சேமித்து வைக்கும்

வைப்பாகப் பற்றிக்கொண்டிருப்பார்கள்.

காரைக்காலம்மையாரும் அந்த நிலையில் உள்ளவரே. தமக்கு இனிய பொருளும் உலகத்துக்கே தலைவனுமாகிய ஈசனை அவர் தம் மனத்துள், எல்லாவற்றிலும் சிறந்த சேமிப்பாக, இனிய வைப்புப்பொருளாக வைத்தார்.

சில சமயங்களில் இனிமையாக இருக்கும் பொருள் வேறு சமயங்களில் சுவையை இழந்துவிடும். சிறுபிள்ளைப் பிராயத்தில் மண்ணில் விளையாடுகிறோம்; பிறகு அந்த விளையாட்டைச் சுவைப்பதில்லை. இறைவனே என்றுமே மாறாமல் இனிமையை அருள்பவன்; மனத்துக்கு இனியவன்; அந்த இனிமை என்றும் மாறாமல் இருப்பது ஆதலின், "என்றும் மனக்கு இனிய வைப்பாக வைத்தேன்" என்றார்.

"அருளே உலகெலாம் ஆள்விப்பது." யார் யாரையோ வள்ளலாகவும் உபகாரியாகவும் தலைவனாகவும் கொண்டு வாழும் நமக்கு நிரந்தரமான இன்பம் கிடைப்பதில்லை. என்றும் அழியாத ஒருவனைத் தலைவனாகக் கொண்டால் அவனால் வரும்இன்பம் என்றும் நிலைத்திருக்கும். ஆகவே ஈசனையே தம்முடைய உபகாரியாக, தலைவனாகக் கொண்டார் அம்மையார்.

"பெரிய செல்வன் ஒருவனைத் தம் வீட்டில் கொண்டுவந்து வைத்துக்கொள்கிறோம். அவனுடைய செல்வமெல்லாம் நம் வீட்டின் அறையில், நாம் எப்பொது வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இருக்கிறது. அந்த நிலையில் நமக்குக் குறைவு ஏது? எதற்கு வேண்டுமானாலும் அந்தப் பொருளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த வள்ளலை உறவு கொண்டு விட்டோம். இவரை நம் வீட்டிலே வைத்திருக்கிறோம். இவரால் நமக்கு எத்தனை இன்பங்கள்! வீடு, வாசல், உடை, உணவு எல்லாம் இவரால் கிடைக்கின்றன." இனி நமக்குக் குறை ஏது? என்று பெருமைப்படலாம்.

இறைவனாகிய வைப்பை உள்ளத்திலே வைத்துப் பூட்டிக் கொண்ட அம்மையார், அவரையே பிரானாகக் கொண்டார். அப்படிக் கொண்ட அந்தக் கணத்திலே தம்முடைய துன்பமெல்லாம் கால் வாங்கி ஓடக் கண்டார். என்றும், மாறாத இன்பம் பெற்று மகிழ்ந்தார். நமக்கு அரியது ஒன்று உண்டா? என்று பெருமிதத்தோடு சொல்கிறார்.

அரியவற்றிலெல்லாம் அரிய பொருள் பரம்பொருளாகியவன் இறைவன். அவனைப் பெற்ற பிறகு அரியது என்பது ஒன்று உண்டோ? பத்து ரூபாய்க்கு ஏங்கினவன், கோடி ரூபாய் பெற்று விட்டால் பத்துக்கோ நூறுக்கோ ஏங்கும்படி இருக்குமா?

இந்த மனநிறைவோடு பாடுகிறார் காரைக்கால் அம்மையார்.

"எனக்(கு) இனிய எம்மானை, ஈசனை யான்என்றும்

மனக்(கு) இனிய வைப்பாக வைத்தேன் – எனக்கு அவனைக்

கொண்டேன் பிரானாகக் கொள்ளலுமே இன்புற்றேன்

உண்டே எனக்(கு)? அரியது ஒன்று?"

தர்மரை தர்மசங்கடத்தில் ஆழ்த்திய புருஷா மிருகம்

தேனம்மை இலக்குமணன்,
காரைக்குடி

அரியும் சிவனும் ஒண்ணு. அறியாதவர் வாயிலே மண்ணு என்றெல்லாம் சொல்லக் கேட்டிருப்போம். ஆனால் சிவனைத் தவிர வேறு கடவுள்களை சிந்தையாலும் தொடாதவர் புருஷா மிருகம். மற்ற கடவுள்களின் பெயரைக் காதில் கேட்டால் கூட கோபம் கொண்டு சொன்னவரின் மேல் பாய்ந்து தாக்கிவிடுவார். அப்பேற்பட்டவரும் அரியும் அரனும் ஒன்று என்று அறியும் நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

இந்திரப் ப்ரஸ்த்தம் என்னும் நகரை தேவ தச்சன் மயன் மூலம் தேவலோகம் போல் நிர்மாணித்தார்கள் பாண்டவர்கள். அந்நகரைப் பார்த்த நாரதர் தர்மரிடம் ராஜசூய யாகம் செய்யும்படிக் கூறினார். யாகத்துக்குப் பெரும்பொருள் நிதியம் தேவைப்படும் என்பதால் அர்ஜுனன், பீமன், நகுலன், சகாதேவன் ஆகியோர் நாலாபுறமும் சென்று பல்வேறு மன்னர்களிடம் போரிட்டு போதிய செல்வத்தைக் கொணர வேண்டும் என முடிவெடுத்தார்கள்.

கிருஷ்ணர் இவர்களை ஆளுக்கொரு திசையில் செல்லுமாறு கூற பீமன் வடதிசையைத் தேர்ந்தெடுத்தான். அங்கேதான் இருந்தது குபேரப் பட்டணம். வடதிசை நோக்கிக் கிளம்பிய பீமனை அழைத்த கிருஷ்ணர் அவனிடம் பன்னிரண்டு ருத்ராட்சங்களைக் கொடுத்தார். “பீமா ! நீ செல்லும் திசையில் குபேர உலகுக்குக் காவலாக புருஷா மிருகம் உள்ளது. அதன் முகம் மனித முகமாவும் உடல் மிருக உடலாகவும் இருக்கும். அதனை அழைத்து வந்தால் இந்த யாகம் நிறைவேறும். ஆனால் அது அவ்வளவு சுலபமல்ல” என்று சொல்லித் தன் பேச்சைச் சற்று நிறுத்தினார்.

“அதை அழைத்து வர என்ன செய்ய வேண்டும். சொல் கிருஷ்ணா. அப்படியே நடக்கிறேன்” என்றான் பீமன். “சிவனைத் தவிர வேறு தெய்வப் பெயர்களைக் கேட்டால் அம்மிருகம் பாய்ந்து குதறிவிடும். அப்படி உன்னைப் பாய்ந்து தாக்க அது வரும்போது அதன் முன் இந்த ருத்ராட்சத்தைப் போட்டால் அதை சிவனின் ரூபமாக எண்ணி பூஜை செய்ய நின்று விடும். அப்பூஜையை முடித்தபிறகுதான் அதற்கு உன் ஞாபகமே வரும். அப்படி அது திரும்ப வரும்போது இன்னொரு ருத்ராட்சத்தைப் போடு. முடிந்தவரை

அது வரும் முன் அங்கிருந்து ஓடி இங்கே வரப் பார். ஜாக்கிரதை" என்று சொல்லி அனுப்பினார்.

பீமன்தான் பலசாலி ஆயிற்றே. அவன் வடக்குத் திசை சென்றான். குபேரன் யாகம் என்றதும் ஏராளமான பொருட் செல்வங்களை வழங்கினான். ஆனால் அத்தோடு பீமன் நிற்கவில்லை. குபேர பூமியில் உள்ள புருஷா மிருகத்தைப் பார்த்து அதனை யாகத்திற்கு அழைத்து வரவேண்டும். இது அவனின் எண்ணம். கிருஷ்ணனின் கட்டளை

புருஷா மிருகம் அப்படி ஒரு விசித்திரமான உருவத்தை எங்கே பார்க்கலாம் என எண்ணி குபேரனின் பூங்காவுக்குச் சென்றான். அங்கே தாடி வைத்த மனிதமுகமும் சிங்க உடலுமாக விசித்திர கம்பீரத்துடன் ஒருயிர் உலாவிக் கொண்டிருந்தது. இதுவே புருஷா மிருகமாக இருக்கவேண்டும் என்று எண்ணினான் பீமன். அவன் எண்ணமும் சரிதான். அதுவே புருஷா மிருகம்.

என்னதான் பீமன் வீரன் என்றாலும் அதை நேரில் கண்டதும் சிறிது பயப்படவே செய்தான். எனவே தயங்கியபடியே அதன் அருகில் சென்று "எங்கள் இந்திரப் பிரஸ்தத்தில் ராஜ சூய யாகம் நடைபெறப் போகிறது. அதற்கு உங்கள் உதவி இருந்தால் சிறப்பாக முடியும். வர முடியுமா "எனக் கேட்டான். அவன் தன்னிடம் பேசியதைக் கேட்டு வியந்த புருஷா மிருகம் ஒப்புக் கொண்டது. ஆனால் ஒரு ஒப்பந்தம் நாம் செய்து கொள்ள வேண்டும் என்றது. சரி என்று ஒப்புக்கொண்டான் பீமன். புருஷா மிருகம் தன் ஒப்பந்தத்தைச் சொல்ல ஆரம்பித்தது. "நான் ஓடிவரும் வேகத்துக்கு இணையாக உன்னால் ஓட முடிந்தால் வருகிறேன். நீ எங்காவது தோற்று நின்றுவிட்டால் உன்னைக் கொன்று விடுவேன், இதற்குச் சம்மதமா" என்றது

பீமன் சம்மதிக்க எதிர்பாராத விதமாக இந்திரப் பிரஸ்தம் இருக்கும் திசையை நோக்கி அது ஓட்டத்தைத் தொடங்கியது. அதன் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாத பீமன் திடீரெனக் "கோவிந்தா கோபாலா" என்று கத்தினார். இதனைக் கேட்டதும், அரியின் பெயரைக் கேட்டு வெகுண்ட புருஷா மிருகம் ஓடுவதைத் திசை திருப்பி அவனைத் துரத்தத் தொடங்கியது. பின்னங்கால் பிடரி படாத குறையாக ஓடத் தொடங்கினான் பீமன்.

பாய்ந்து வரும் சிங்கத்தின் முன் மனிதஓட்டம் எம்மாத்திரம். கிட்டே நெருங்கி விட்டது புருஷா மிருகம். விதிர்விதிர்த்த பீமன் முதல் ருத்ராட்சத்தை அங்கே போட்டான். அது சிவலிங்கமாக மாற அதைக் கண்ட

புருஷா மிருகம் அங்கேயே அமர்ந்து சிவ பூஜை செய்யத் தொடங்கியது. புருஷா மிருகம் தன்னைத் தொடாத தொலைவுக்குப் போய் மூச்சு வாங்க நின்றான் பீமன். பின்னர் அவன் திரும்ப ஓட ஆரம்பிக்க பார்த்தால் பக்கத்தில் ஓடிவந்து கொண்டிருந்தது புருஷா மிருகம். அங்கேயும் அது அவனைப் பிடிக்க வர அடுத்த ருத்ராட்சத்தைப் போட்டான். அங்கேயும் அமர்ந்து பூஜை செய்துவிட்டு வந்தது புருஷா மிருகம்.

இப்படியாகப் பன்னிரெண்டு ருத்ராட்சங்களையும் பன்னிரெண்டு இடங்களில் போட்டு ஓடி இந்திரப் பிரஸ்தத்தை எட்டினான் பீமன். அந்தோ என்ன பரிதாபம். அவன் தன் ஒரு காலால் இந்திரப் பிரஸ்த எல்லையைத் தொட்டதுதான் தாமதம் இன்னொரு காலைப் பின்னாலிலிருந்து பிடித்துக் கொண்டது புருஷா மிருகம். அப்போது அங்கே தர்மர் வர இருவரும் தத்தமது பக்க நியாயத்தைக் கூறினார்கள்.

பீமனோ ”எல்லையைத் தொட்டுவிட்டேன்” என்கிறான். புருஷா மிருகமோ ”எல்லையில் படாத இன்னொரு காலைப் பிடித்துவிட்டேன்” என்றது. இரண்டு பக்க நியாயத்தையும் உணர்ந்தார் தர்மர். அவர் என்ன செய்வார். இந்திரப் பிரஸ்தத்துக்காகப் போன தம்பியை இழக்க முடியுமா. ஆனாலும் தர்மத்தை மீற முடியாதே. தர்ம சங்கடத்தில் ஆழ்ந்தார். எனவே எல்லையில் பட்ட கால் பீமனுடையது. படாத கால் புருஷா மிருகத்திற்குத்தான் சொந்தம் எனத் தீர்ப்பளித்தார்.

இதைக் கேட்டு மகிழ்ந்த புருஷா மிருகம்,”தர்மரே உம்முடைய தர்ம சிந்தைக்காக மகிழ்கிறேன். பீமன் பன்னிரெண்டு இடங்களில் சிவ பூஜை செய்யும் வாய்ப்பை எனக்கு வழங்கினான். அதனால் அவனை மன்னிக்கிறேன். அரியும் சிவனும் ஒன்று என உணர்ந்தேன்” எனக் கூறியது. மேலும் ராஜ சூய யாகம் சிறப்பாக நடைபெறத் தன் பங்களிப்பையும் அது வழங்கியது.

எனவே தர்மத்தின் மேல் எப்போதும் நம்பிக்கை வைப்போம். அரியும் சிவனும் ஒன்று என்றும் உணர்வோம்.

திருமந்திரம்

மேலுணர் வான்மிகு ஞாலம் படைத்தவன்
மேலுணர் வான்மிகு ஞாலம் கடந்தவன்
மேலுணர் வார்மிகு ஞாலத் தமரர்கள்
மேலுணர் வார்சிவன் மெய்யடி யார்களே.

விளக்கம்:

சிவபெருமான் திருவாணையால் உயிர்கட்கு உலகுடல்களைப் படைத்துக் கொடுத்தனன் அயன். அதுபோல் காத்தனன் அரியும். எனினும் அவர்கள் உணர்வெல்லாம் படைத்தல் காத்தலாகிய தொழிலே மேல் என்று உணர்ந்து உவகையுற்று நிற்கும். அதனால் சிவனை உணரார். இந் நிலவுலகத்து வாழும் மெய்யடியார் விரும்பியுணர்வது சிவனையே. அதனால் அவர்கள் சிவனடியார்கள் என்று எவரானும் என்றும் வழுத்தப்பெறுவர்.

சிவாலயங்களின் சிறப்புகள் - 7



சிவனேச செல்வர்களுக்கு பணிவான வணக்கங்கள்.

சிவாலயங்களின் சிறப்புகளை மாதம் ஒரு திருக்கோயில் என எழுத இருக்கிறேன். இந்தத் தகவல்கள் கோயிலின் ஆலய குறிப்புகளில் இருந்தும் கோயில் குருக்கள் சொல்வதை வைத்தும் எழுதி எழுதியுள்ளேன்.

வே.இராமசாமி, B.Com.F.C.A.,
Chartered Accountant
பலவான்குடி

திருவாரூர்

(பகுதி-2)

மரகதலிங்கத்திற்கு (வீதி விடங்க லிங்கம்) காலை 8.30, 11மணி, இரவு 7 மணிக்கு அபிஷேகம் நடக்கும். அபிஷேகத்திற்கு பின் சிறிய வெள்ளிப்பெட்டியில் மலர்களுக்கு நடுவே இந்த லிங்கம் வைக்கப்படும். அதன் மேல் வெள்ளிக்குவளை சாற்றி, அதிகாரிகள் முன்னிலையில் பெட்டி பூட்டப்படும். மற்ற நேரங்களில், பூட்டிய இந்த பெட்டி தியாகராஜரின் வலதுபுறத்தில் இருக்கும்

மூலவரின் சந்நிதியிலுள்ள நந்தியின் மேற்பரப்பில் உள்ள கல்லில் 27 நட்சத்திரங்களும், 12 ராசிச்'சக்கரமும் வடிக்கப்பட்டுள்ளன

கமலாலயம் எனப்படும் தேவ தீர்த்தம் ஆலயத்தின் எதிரிலும் , சங்கு தீர்த்தம் ஆயிரங்கால் மண்டபத்தின் அருகிலும், கயா தீர்த்தம் ஊருக்கு வெளியே உள்ள கேக்கரை என்ற இடத்திலும், வாணி

தீர்த்தமான சரஸ்வதி தீர்த்தம் மேற்கு பிரகார சித்திரசபை மண்டபத்திற்கு எதிரிலும், செங்கழுநீரோடை கோயிலில் இருந்து 1 கிமீ தோய்விலும் அமைந்துள்ளன.

கிழக்கு கோபுரவாயில் அருகே விநாயகர்,

முருகர் கோயில்கள். அடுத்து வீதி விடங்க விநாயகர் சந்நிதி. இவரின் பின்னால் பிரம்மநந்தி. இதற்கடுத்த பெரிய பிரகாரத்தில் பக்தகாட்சி மண்டபம் (பங்குனி உத்திர விழா முடிந்து தியாகராஜர் நடனக்காட்சி தருவது), ஊஞ்சல் மண்டபம் உள்ளன. அடுத்து ஆகாச விநாயகர் சந்நிதி, துலாபார மண்டபம், சரஸ்வதி தீர்த்தம் உள்ளன. இதற்கடுத்து பெரியதான சித்திரசபா மண்டபம் உள்ளது. பக்கத்தில் சிறியதான புராண மண்டபம் உள்ளது. அடுத்து கமலாம்பிகை அம்பாள் சந்நிதி உள்ளது. பராசக்தி பீடங்களில் ஒன்றான இங்கு அம்பிகை தவக்கோலத்தில் காட்சி தருகிறார். அம்மையின் யோகாசனக்கோலம் அபூர்வமும் அழகும் நிறைந்தது. ஆடிப்பூரவிழா இச்சந்நிதியில் மிகவும் விசேஷம். பக்கத்தில் உச்சிஷ்ட கணபதி சந்நிதி. அம்பாள் கோயிலின் மேற்கு மூலையில் அக்ஷரபீடமுள்ளது. இதில் பீடமும், 51 எழுத்துக்கள் எழுதப்பட்ட திருவாசியும் மட்டுமே உள்ளன. அதற்கடுத்து ஷண்முகர், பாலசுப்ரமணியர், கலைமகள், மகரிஷிகள் வழிபட்ட லிங்கங்கள் முதலான சந்நிதிகள் உள்ளன. பார்ப்பதீஸ்வரத்தில் உள்ள தீர்த்தக்கிணறு முக்திக்கிணறு எனப்படுகிறது. தேவாசிரியம் எனப்படும் ஆயிரங்கால் மண்டபத்தில் தான் தியாகராஜர் ஆழித்தேர் விழா முடித்து வந்தமர்ந்து மகாபிஷேகம் செய்துகொண்டு ஆட்சி செய்வதாக ஐதீகம். எனவே இம்மண்டபம் ராஜதானி மண்டபம் என்றும் அழைக்கப்படுகிறது. இம்மண்டபத்தை அடுத்து சங்கு தீர்த்தம் உள்ளது. சங்கு தீர்த்தத்தை அடுத்த கோபுர வாயிலின் இடப்புறம் விறன்மிண்ட நாயனார் சந்நிதி உள்ளது. இதையடுத்து இந்திரன் கொடிமரமும், ராஜநாராயண மண்டபமும் உள்ளன. பங்குனி உத்திர விழா முடிவில் தியாகராஜர் எண்ணெய்க்காப்பு செய்துகோலும் மண்டபம் இதுவென்பதால் இம்மண்டபம் எண்ணெய்க்காப்பு மண்டபம் என்றும் அழைக்கப்படுகிறது. இதன் வலப்புறம் விநாயகர், இடப்புறம் துர்க்கை, ஜ்வரஹரேஸ்வரர், ஏகாதசருத்ரர் வழிபட்ட சிவலிங்க மூர்த்தங்கள் உள்ளன முசுகுந்தர் சந்நிதி, இந்திரலிங்க சந்நிதி இந்திரலிங்க சந்நிதி அருகே உள்ள சதுரவடிவக்கல்லின் மேல் ஏறி நின்றால் ஏழு கோபுரங்களையும் தரிசிக்கலாம்

இதையடுத்து தக்ஷேஸ்வரர், மனுச்சக்கரேஸ்வரர், பகீரதேஸ்வரர், கைலாசத்தியாகர், பாண்டியநாதர், சப்தமாதர், சப்தரிஷீஸ்வரர், சேரநாதர் முதலானோரின் சந்நிதிகள் உள்ளன. அடுத்து வைப்புத்தலமான ஆடகேஸ்வரம். இங்கு நாகபிலமும், தலமரமான பாதிரியும் உள்ளன. அருகில் விஸ்வாமித்திரேஸ்வரர், புரூரவேஸ்வரர், மகாபலீஸ்வரர், ரௌத்ர துர்க்கை, அருணாச்சலேஸ்வரர், வருணேஸ்வர விநாயகர், வருணேஸ்வரர் முதலானோரின் சந்நிதிகள் உள்ளன. ஆனந்தேஸ்வரத்தில் மங்கண முனிவர் ஸ்தாபித்த லிங்க மூர்த்தம் விஸ்வகர்மேச கோயில் கருங்கல்லால் ஆனது. இக்கோயிலில் அழகான கொடுங்கைகள், சிற்ப எழில் வாய்ந்த தட்சிணாமூர்த்தி, கணபதி, துர்க்கை, பிரம்மா முதலியோரின் திருவடிவங்கள் உள்ளன சித்தீஸ்வரர் மேற்கு நோக்கி தனிச்சன்னிதியில் உள்ளார்.

தட்டச்சுற்றி மண்டபத்தில் வல்லபை விநாயகர் சந்நிதி உள்ளது. கொடிமரத்து விநாயகர் பொற்க்கம்ப விநாயகர் எனப்படுகிறார்.

அழகியான் கோபுர வாயிலின் நடுவில் வடப்புறம் அதிகார நந்தி சந்நிதி உள்ளது . மூலவர் சந்நிதியை சுற்றியுள்ள உள்பிரகாரத்தில் பிரதோஷநாயகர்

சந்திரசேகரர், திரிபுரசம்ஹாரர், மாணிக்கவாசகர், சோழமன்னன், ஐங்கலக்காசு விநாயகர் முதலானோரின் சந்நிதிகள் உள்ளன.

மூலவரின் வலப்புறம் அர்த்தமண்டபத்தில் சோமகுலாம்பிகை சந்நிதி.

அடுத்து தியாகராஜர் சந்நிதி. தியாகேசரின் அருகில் உள்ள அம்மை கொண்டி என்று அழைக்கப்படுகிறார். தியாகேசரின் வலப்பால் உள்ள பெட்டகத்தில் வீதி விடங்கராகிய மரகத சிவலிங்கமூர்த்தி உள்ளார். இம்மரகத லிங்கத்திற்கு நாள்தோறும் காலை மற்றும் மாலை வேளைகளில் அபிஷேகம் நடைபெறுகிறது. தியாகராஜரின் முகம் மட்டுமே தரிசிக்க இயலும். மார்கழி திருவாதிரையில் இடது பாதத்தையும், பங்குனி உத்திரத்தில் வலது பாதத்தையும் தரிசிக்கலாம்.மற்ற அங்கங்கள் மூடி வைக்கப்பட்டிருக்கும்.

தியாகராஜர் சந்நிதி எதிரில் நந்தி, மூலாதாரக் கணபதி, நால்வர், பஞ் சமுக வாத்தியம், அறுபத்துமூவர் உற்சவ மூர்த்தங்கள் முதலானோரின் சந்நிதிகள். மேலும் அருகில் வாதாபி கணபதி, சஹஸ்ரலிங்கம், பிட்சாடனர், மகாலட்சுமி, துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி, உற்சவ மூர்த்தங்கள், மந்திரபீடம் முதலான சந்நி திகளும் உள்ளன வடக்குப் பிரகாரத்தில் ருணவிமோசனர் சந்நிதி உள்ளது

இரண்டு சண்டிகேஸ்வரர் (எம சண்டர், ஆதி சண்டர்) சந்நிதிகள் உள்ளது சந்திரசேகரர் கோயில் மற்றும் பைரவர் சந்நிதி விசேஷமானவை நீலோத்பலாம்பாள் தனிச்சன்னிதியில். அம்மையின் கீழ் இடக்கரம் தோழி இடுப்பில் தூக்கி வைத்துக்கொண்டிருக்கும் முருகரின் தலையைத் தொட்டுக்கொண்டிருக்கிறது. இவ்வமைப்பு அழகும், அற்புதமும் நிறைந்த அபூர்வமானது.

கமலாலயக்குளத்தின் மத்தியில் யோகாம்பாள் சமேத நாகநாத சுவாமி கோயில் அமைந்துள்ளது தியாகராஜர் சந்நிதியில் தேர் வடிவில் விளக்கு ஒன்று உள்ளது பஞ்சமுக வாத்தியம் சிறப்பானது. நாதஸ்வரம் அளவில் பெரியது. அம்மன் சன்னதி வெளிப்பிரகார சுவரில் 6 சீடர்களுடன் தட்சிணாமூர்த்தி அருள்பாலிக்கிறார்.

ஹயக்கிரீவரும் தனி சன்னதியில் லிங்க பூஜை செய்யும் காட்சியைக் காணலாம். இவரை “ஹயக்கிரீஸ்வரர்’ என்கின்றனர்

இங்கு அஷ்ட துர்க்கை சன்னதிகள் உள்ளன. இந்த துர்க்கைகளையும்,மகாலட்சுமியையும் முத்துசுவாமி தீட்சிதர் பாடியுள்ளார்

கமலாம்பிகை கோபுரத்தின் உச்சியில் “ஆகாச பைரவர்’ காவல் காத்து வருகிறார். இங்குள்ள பைரவர் “சித்தி பைரவர்’ எனப்படுகிறார். அம்மன் மூலஸ்தானம் அருகே வலதுபுறம் கமலமுனி சித்தர் பீடம் உள்ளது.

சிவன் சன்னதியின் பிரகாரத்தில் மிகப்பெரிய “சிவசூரியன்’ அருள்பாலிக்கிறார்.

சிதம்பரமும்...திருவாரூரும்...

தில்லையில் நடராஜர் ஆடியது ஆனந்த கூத்து .திருவாரூரில் தியாகராஜர் ஆடியது அஜபா நடனம். இருவரும் நடனமாடியது திருவாதிரை நன்னாள்தான் இருவரும் திருவாதிரை நன்னாளில் தான் தேரில் மட்டுமே உலா வருவார்கள். இருவருக்கும் ஆண்டுக்கு ஆறு முறை மிகப்பெரிய அளவில் அபிஷேகங்கள் நடைபெறும் சிதம்பரத்தில் சிதம்பர ரகசியம் காண 96 கண்கள் உடைய சாளரம் வழியே காண

வேண்டும். திருவாரூரில் அப்பனின் திருமேனியே ரகசியமாகும். சிதம்பரத்தை பொன்னம்பலம் என்று கூறுவார்கள் திருவாரூரை பூவம்பலம் என்று கூறுவார்கள் சிதம்பரத்தில் நமச்சிவாயா என்று கூறுவார்கள் திருவாரூரில் ஆரூரா தியாகேசா என்று கூறுவார்கள் இருவருக்குமே செங்கழுநீர் மாலை விசேஷமாய்ச் சொல்லப் படுகின்றது. இரு கோயில்களும் ஆயிரங்கால் மண்டபம் கொண்டது. தில்லைக் கோயிலை ஆகாச ரூபமாய்ப் பார்த்தால், திருவாரூரோ, பூமி வடிவாய்ப் பார்க்கப் படுகின்றது .இந்த இரு கோயில்களிலும் இருந்த பழைய மூலஸ்தான லிங்கத் திருமேனி, மூலட்டானேஸ்வரர் என்றே அழைக்கப் படுகின்றது. தில்லைக் கூத்தனின் பாத தரிசனமும் விசேஷம், அதே போல் திருவாரூர் தியாகராஜாவின் பாத தரிசனமும் விசேஷம். பதஞ்சலி, வியாக்ரபாதர் இருவருமே இந்த இரு இடங்களிலுமே பாத தரிசனம் கண்டதாய்ச் சொல்லப் படுகின்றது. தில்லையிலே அதிர வீசி ஆடிய இடப் பாதத்தைக் கண்டால், திருவாரூரில் இருந்து ஆடிய கூத்தைக் கண்டனர்.

இன்று நாமும் காண முடிகின்றது. திருவாரூரில் கமலாம்பிகையும், நீலோற்பலாம்பிகையும் தேவியர். தில்லை யிலே சிவகாமி அம்மையும், மூலட்டான நாயகியும் தேவியர்.

நடராஜர் சேக்கிழாருக்கு "உலகெலாம்" என்று துவங்கும் அடியை எடுத்துக் கொடுத்துப் பெரிய புராணத்தைப் பாடச் சொல்லும் முன்னரே திருவாரூரில் சுந்தரருக்கு, "தில்லை" என்று அடி எடுத்துக் கொடுத்திருக்கின்றார். இப்படி விண் தத்துவத்தையும், மண் தத்துவத்தையும் அடியார்கள் மூலம் இருவருமே பாமர மக்களுக்கு உணர்த்துகின்றனர்.

பாத தரிசனம்

பங்குனி உத்திர திருநாளின் போது இடது பாத தரிசனமும் திருவாதிரை நாளில் வலது பாத தரிசனமும் நமக்கு கிடைக்கும் .மற்ற நாட்களில் தியாகராஜரின் பாதம் மலர்களால் மறைக்கப்பட்டிருக்கும்

திருவாரூர் தேர்

திருவாரூர் தேர் 96 அடி உயரமும் 300 டன் எடையும் 4 அடுக்குகளை கொண்டதும் ஆக உள்ளது திருவாரூர் தேருக்கு 10 சக்கரங்கள் உள்ளது இந்தத் தேரின் நான்காவது நிலையில்தான் தியாகராஜ சுவாமி வீற்றிருப்பார். இந்தப் பீடம் மட்டுமே 31 அடி உயரமும், 31 அடி அகலமும் கொண்டது.தேரை அலங்கரிக்க அதிக அளவில் மூங்கில் கம்பங்களும், 3,000 மீட்டர் அளவுக்கு தேர் சீலைகளும் பயன்படுத்தப் பெறுகின்றன. தேரை அலங்கரிக்கும்போது, 500 கிலோ எடையுடைய துணிகள், 50 டன் எடையுடை கயிறுகள், 5 டன் பனமர கட்டைகள் பயன்படுத்தப் பெறுகிறது.

திருவாரூர் தேரின் முன்புறத்தில் 4 பெரிய வடக் கயிறுகள் பொருத்தப் பெற்று இருக்கின்றன. ஒரு வடக் கயிறு 21 அங்குலம் சுற்றளவும் 425 அடி நீளம் கொண்டதாக இருக்கும்.

திருவாரூர் அழகு

திருவாரூர் கோவிலுக்கு அழகு தருவது சுமார் 120 அடி உயரமுள்ள அதன் ராஜகோபுரமாகும்.

தெற்கு வடக்காக 656 அடி அகலமும், கிழக்கு மேற்காக 846 அடி நீளமும், சுமார் 30 அடி உயரமுள்ள மதிற்சுவரை நான்கு புறமும் கொண்டுள்ள நிலப்பரப்பில் ஆலயம் அமைந்துள்ளது.

நான்கு புறமும் கோபுரங்களையும், தேர் ஓடும் வீதியையும் சேர்த்து ஐந்து

பிராகாரங்களுடனும் இவ்வாலயம் அமைந்துள்ளது.

திருவாரூர் கோவில், அதன் முன்புறமுள்ள கமலாலயம் குளம், கோவிலைச் சார்ந்த தோட்டம் ஆகியவை ஒவ்வொன்றும் 5 வேலி நிலப்பரப்பில் அமைந்துள்ளதான சிறப்பு இத்தலத்திற்கு உண்டு.

கோயில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி, செங்கழுநீர் ஓடை ஐந்து வேலி என்ற பழமொழி மூலம் இதன் சிறப்பை உணரலாம்.

(ஐந்து வேலி என்பது 1000 அடி நீளம் 700 அடி அகலம்). இவ்வளவு பிரமாண்டமான ஆலயத்தை முழுமையாக தரிசனம் செய்து முடிக்க வேண்டுமானால் ஒரு நாள் முழுவதும் செலவிட்டால் தான் முடியும்.

சப்தவிடங்கத்தலங்கள்’

“சப்தம்‘ என்றால் ஏழு.

திருவாரூரில் “வீதி விடங்கர்’, திருநள்ளாறில் “நகர விடங்கர்’, நாகப்பட்டினத்தில் “சுந்தர விடங்கர்’, திருக்குவளையில் “அவனி விடங்கர்’, திருவாய்மூரில் “நீலவிடங்கர்’, வேதாரண்யத்தில் “புவனி விடங்கர்’, திருக்காரவாசலில் “ஆதி விடங்கர்’ என்ற பெயர்களில் விடங்க லிங்கங்கள் அழைக்கப்படுகின்றன.

இந்த லிங்கங்கள் கையடக்க அளவே இருக்கும். சப்தவிடங்கத்தலங்கள் உள்ள கோயில்களில் சுவாமியை “தியாகராஜர்’ என்பர்.

யாரை வணங்கினால் என்ன பலன்

1.சிவன் சன்னதியின் முதல் பிரகாரத்திலுள்ள மூலாதார கணபதி, சுருண்டு படுத்த ஐந்து தலை நாகத்தின் நடுவில் விரிந்த தாமரைப்பூ மீது நர்த்தனம் ஆடும் நிலையில் உள்ளார். யோகா பழகுபவர்கள் இவரை வணங்குவது சிறப்பு

2.மேற்கு கோபுரத்தின் அருகில் சுந்தரருக்கு சிவனால் தரப்பட்ட பொன், நிஜத்தங்கம் தானா என்பதை சோதித்துப் பார்த்து தந்த, “மாற்றுரைத்த விநாயகர்’ அருள்பாலிக்கிறார். நகை வாங்கும்முன் பெண்கள் இவரை வழிபடுகின்றனர்

3. அம்மன் சன்னதி பிரகாரத்திலுள்ள, நடுக்கம் தீர்த்த விநாயகரை, நரம்புத்தளர்ச்சி உள்ளவர்கள், டென்ஷனாக இருப்பவர்கள் வழிபடுகிறார்கள்.

4. கோயிலின் மேற்கு கோபுர நுழைவாயிலில் ஆஞ்சநேயர் சன்னதி உள்ளது. இவரை வழிபட்டால் தொலைந்த பொருள் கிடைக்கும் என்பது நம்பிக்கை

5. மூலவர் வன்மீகி நாதரை வழிபட்டால் எண்ணற்ற வரங்களும், செல்வ செழிப்பும் கிடைக்கும், பாவங்கள் நீங்கும், ஆணவம் மறையும்.

6. அம்மன் சன்னதியில் உள்ள அட்சர பீடத்தை வணங்கினால் கல்வியறிவு பெருகும்.

7. இத்தலத்தில் உள்ள ராகு கால துர்க்கையை வழிபட்டால் பதவி உயர்வு பணிமாற்றம் உள்ளிட்ட பல காரியங்கள் வெற்றியடையப் பெறுகிறார்கள்.

8. இத்தலத்து சண்முகரை வழிபட்டால் பகை விலகும்

9. நீலோத்பலாம்பாளை வழிபட்டால் அர்த்தஜாமத்தில் நைவேத்தியம் செய்து பால் சாப்பிட்டால் குழந்தை வரம் கிடைக்கிறது. பிரிந்த தம்பதிகள் ஒன்று சேருவதும் நிகழ்கிறது.

10. ருணவிமோசனப் பெருமானை வழிபட்டால் கடன் தொல்லை, உடற்பிணிகள் ஆகியன விட்டு விலகும்.

பெரியபுராணக் கதைக் களம்

அன்பர்களே !

தொண்டர்தம் பெருமை அளவிடற்கு அரியது. அவர்களின் அருள் வரலாறு நம்மை நல்வழியில் நடத்தும். திருநெல்லையின் இவ்விதழில் புதுமை இணைப்பாக பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ள அறுபத்து மூன்று அருந்தொண்டர் கதைகள் ஒவ்வொன்றாக காதுகளுக்கும், கண்களுக்கும் மனதிற்கும் இன்பம் சேர்க்கும் வகையில் கதைவடிவில் ஒளிபரப்பாகிறது. கேட்டு, உணர்ந்து அனுபவித்து மகிழுங்கள்.

தென் சபாநாயகர் கோயில் தரிசனம்

01.05.2024 அன்று அருள்மிகு சிவகாமி அம்மன் உடனுறை ஸ்ரீ ஆனந்த நடராச மூர்த்திக்கு சித்திரை மாத திருவோண நட்சத்திர மகா அபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. அன்று தேய்பிறை அஷ்டமி தினமும் ஆனதால் அருள்மிகு சொர்ண ஆகர்ஷண பைரவ மூர்த்திக்கும் ஒருசேர மகா அபிஷேகம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

வைகாசி மாத வழிபாட்டு நிகழ்ச்சிகள்

16.05.2024	வளர்பிறை அஷ்டமி	வைரவர் வழிபாடு
19.05.2024	வளர்பிறை ஏகாதசி	பெருமாள் வழிபாடு
20.05.2024	பிரதோஷம்	
26.05.2024	சங்கடஹரசதுர்த்தி	விநாயகர் வழிபாடு
31.05.2024	தேய்பிறை அஷ்டமி	வைரவர் வழிபாடு
0 4.06.2024	பிரதோஷம்	

ஒலிப்பேழை

கம்ப வாரிதியின் பக்கம்

திருநெல்லை இதழில் மாதந்தோறும் கம்பவாரிதி இலங்கை திரு ஜெயராஜ் அவர்களிடம் வினாக்களை எழுப்பி அவ்வினாக்களுக்கு விடையை அவர்களின் குரல் வழியாகப் பெற்று திருநெல்லையில் பதிவிடுகிறோம்.

அவர்களிடத்தில் அன்பர்கள் கேட்ட வினாக்களும் அதற்கு அவர்கள் அளித்த விளக்கங்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கேட்டுப் பயன்பெற வேண்டுகிறோம்.

வினா – 1 விளக்கம்

1. சைவர்கள், ஆலயவழிபாடு மற்றும் சிவச்சின்னங்கள் அணிவதின் தேவை குறித்த உங்கள் கருத்து

வினா – 2 விளக்கம்

2. இந்து மதத்தில் உள்ள பல்வேறு கோட்பாடுகளில் சைவர்கள் கடைபிடிக்க வேண்டிய கோட்பாடு எது

வினா – 3 விளக்கம்

3. சைவர்கள் வைணவக் கடவுள்களை வழிபடுவதை சைவத்தில் தீவிரமான ஈடுபாடு கொண்டவர்கள் எதிர்ப்பதும் தீவிரமான வைணவர்கள் சைவக்கடவுள்களை வழிபட மறுப்பதும் சரியா.

பயிற்சிப் பேழை

அப்பர் தேவாரம்

சுந்தரர் தேவாரம்

திருப்புகழ்

கோவிலூர் ஆண்டவர் நூலகம்

கோவிலூரில் அமைக்கப்பெற்றுள்ள ”கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில்” சுமார் 43,000 நூல்கள் உள்ளன. நூல் விவர அட்டவணையைப் பதிவிறக்கம் செய்ய இங்கு சொடுக்கவும்.

கோவிலூர் ஆண்டவர் இணைய நூலகம்



கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில் உள்ள நூல்கள் அனைத்தையும் கோவிலூர் ஆண்டவர் நூலகம் என்ற இணையதள நூலகத்தில் பதிவேற்றம் செய்து தமிழ்க் கொடையாக அளிக்க முடிவு செய்துள்ளோம்.

தற்போது சுமார் 3478 அரிய நூல்கள் இணைய நூலகத்தில் உள்ளன.

இப்போது நாள் ஒன்றுக்கு சுமார் 3000 பக்கங்களைப் புதிதாக இந்த நூலகத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த நூலகத்தில் உள்ள நூல்களை விலை இல்லாமல் படிக்கலாம்/ பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இந்த நூலகத்தில் உள்ள நூல்களை விலை இல்லாமல் படிக்க / பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கோவிலூர் ஆண்டவர் நூலகத்தில் உள்ள (பட்டியலில் காட்டப்பெற்றுள்ள) எந்த நூலாவது உங்களுக்கு தேவை என்றால் நூலகப் பொறுப்பாளர் திரு வெங்கடாசலம் அவர்களைத் (தொலைபேசி எண் 9442912649 என்பதில்) தொடர்பு கொள்ளவும். அந்த நூல் பதிப்புரிமைக்கு அப்பால் இருக்கும் நிலையில் அதை நம் இணைய நூலகத்தில் சேர்த்திட ஆவன செய்கிறோம். தாங்களும் அந்த நூலை உங்கள் வீட்டில் இருந்து இணையவழியாகப் படிக்கலாம். நூல் இணையத்தில் சேர்த்தபின் உங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்படும். நீங்கள் அந்த நூலை இணைய நூலகத்தில் படித்துக் கொள்ளலாம் அல்லது பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இதற்கு எந்தக் கட்டணமும் இல்லை

இணைய நூலகத்தில் சென்ற மாதத்தில் மட்டும் சுமார் 250 நூல்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. மிகவும் அரிதான சில நூல்கள் இப்போது பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

இணைய நூலகத்தைப் பயன்படுத்துவோம். இறை தத்துவங்களை அறிவோம்.

முந்தைய இதழ்களை படிக்க அந்தந்த லிங்கை கிளிக் செய்யவும்

திருநெல்லை – புரட்டாசி

திருநெல்லை – ஐப்பசி

திருநெல்லை – கார்த்திகை

திருநெல்லை – மார்கழி

திருநெல்லை – தை

திருநெல்லை – மாசி

திருநெல்லை – பங்குனி

தென்சபாநாயகர் கோவில் கட்டளைகளில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் 94433 35312 என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும்.

♦♦♦♦♦

திருநெல்லை இணைய வழி திங்களிதழைப் பெற விரும்புபவர்கள் 94433 37011 என்ற எண்ணிற்கு வாட்சப்–பில் தொடர்பு கொள்ளவும்.

♦♦♦♦♦

இணைய வழி தேவார இன்னிசை வகுப்பில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் 94433 35312 என்ற எண்ணை வாட்சப்–பில் தொடர்பு கொள்ளவும்.

♦♦♦♦♦

திருநெல்லை இதழுக்கான ஆன்மிகப் படைப்புகள் வரவேற்கப்படுகிறன. திருநெல்லை (இணைய இதழ்), கோவிலூர் மடாலயம், கோவிலூர் என்ற முகவரிக்கு அஞ்சலிலோ அல்லது நேரிலோ தங்கள் ஆக்கங்களை அன்பர்கள் அளிக்கலாம்.

♦♦♦♦♦

திருநெல்லை இணைய வழி மாத நாளிதழ் பற்றி தங்களுடைய மேலான கருத்துக்களை வாட்சப் எண். 94433 37011 மற்றும் koviloormadalayam@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பவும்.